# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

## கொங்கு மாமணி விருது நல்கி கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

**2001 ஆம் ஆண்டு**

1. திரு.கே.எம்.சென்னியப்பன்
2. டாக்டர். பழனி ஜி.பெரியசாமி
3. திரு. ஜெம். ஆர். வீரமணி

**2002 ஆம் ஆண்டு**

4. திரு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம்
5. திரு. ஆர்.காந்தி

**2003 ஆம் ஆண்டு**

6. திரு. டி.ஆர்.கார்த்திகேயன், I.P.S. (Retd.)
7. திருச்சி. ஆர். தேவராஜன்
8. திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேல்

**2004 ஆம் ஆண்டு**

9. முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்
10. டாக்டர் சி.பழனிவேலு
11. டாக்டர். பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

**2005 ஆம் ஆண்டு**

12. NSIT. திரு. எம்.முருகேசன்
13. திரு. கே.பழனியப்பன்
14. திரு.சி.கே.இராமசாமி

**2006 ஆம் ஆண்டு**

15. திரு.நல்ல கோவிந்தசாமி
16. சக்திமசாலா திரு.பி.சி.துரைசாமி
17. திரு. வி.கே.தங்கவேல்

"கொங்குமாமேதை விருது பெற்றவர்
அருட்செல்வர் டாக்டர். நா.மகாலிங்கம்

**2007 ஆம் ஆண்டு**

18. புலவர் செ.இராசு
19. திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி
20. பத்மஸ்ரீ டாக்டர். க.ரா.பழனிசாமி

# கொங்கு மாமணி



## டாக்டர் என்.எம். வீரையன்

விவசாயக் குடும்பத்தில் பிறந்து, பல்மருத்துவராக வாழ்க்கையைத் தொடங்கி, தனது அயராத உழைப்பாலும், தளராத தன்னம்பிக்கையாலும், திடமான முயற்சியாலும், கொங்கு சமுதாயத்திலேயே முதல் பல்கலைக்கழக வேந்தராக உயர்ந்துள்ளவர், தமிழகத்தின் தலைசிறந்த கல்வியாளர்களில் ஒருவராக விளங்கும் டாக்டர் என்.எம்.வீரையன் அவர்கள்.

சென்னை சவீதா பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் வீரையன் அவர்கள் 1947 ஆம் ஆண்டு கவுந்தபாடிக்கு அருகிலுள்ள நல்லிகவுண்டனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரப்ப கவுண்டர் – திருமதி முத்தாயம்மாள் தம்பதியருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். பள்ளிப்படிப்பை கவுந்தபாடியிலும், புகுமுக வகுப்பை சென்னை லயோலா கல்லூரியிலும், (BDS) பல்மருத்துவப் பட்டப் படிப்பை 1970 ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியிலும் முடித்தார்.

சிறிது காலம் பல் மருத்துவராகப் பணியாற்றிய பின்னர், 1977 ஆம் ஆண்டு ஈரோடு நகரில் 100 படுக்கைகள் கொண்ட பல்வேறு சிறப்புப் பிரிவுகளைக் கொண்ட சவீதா மருத்துவமனையை உருவாக்கினார். 1986 ஆம் ஆண்டு சவீதா மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளையைத் துவக்கினார். 1988 ஆம் ஆண்டு சென்னை வேலப்பன் சாவடியில் சவீதா பல்மருத்துவக்கல்லூரி மற்றும் பொது மருத்துவமனையை உருவாக்கினார். தற்போது இந்தக் கல்லூரி இளநிலை மற்றும் முதுநிலை பல்மருத்துவப் படிப்பினை அளிப்பதில் இந்திய அளவில் தனியிடத்தைப்பிடித்து, இந்தியாவின் மிகச்சிறந்த பல்மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. அயல்நாட்டு பல்மருத்துவர்களும், பல்மருத்துவ மாணவர்களும், பயிற்சி பெறும் வகையில் இக்கல்லூரியின் கட்டமைப்பும், வசதிகளும் உலகளவில் சிறந்து விளங்குகின்றன என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் இக்கல்லூரி Glascow University (UK) மற்றும் Malaysian University ஆகியவற்றுடன் ஒப்பந்தம் கொண்டுள்ளது.

ஆசியக்கண்டத்திலேயே வெகுசில கல்லூரிகளில் ஒன்றாக MOMS, MFDS போன்ற பட்டப்படிப்புகளின் தேர்வு மையமாக சவீதா பல்மருத்துவக் கல்லூரி விளங்குகிறது என்பது இக்கல்லூரியின் பெரும் சிறப்பு.

ஒவ்வொரு ஆண்டும் இளநிலை பல்மருத்துவப் பிரிவில் முதன்மையாக வரும் மாணவருக்கு, முதுநிலை பல்மருத்துவப்பிரிவில் முற்றிலும் இலவசமாக அந்த மாணவர் விரும்பிய துறையிலேயே சேர்ந்து பயில வாய்ப்பளித்து உற்சாகப்படுத்தி வருகிறார், டாக்டர் வீரையன் அவர்கள். இது இந்தியாவில் எந்த பல்மருத்துவக் கல்லூரியிலும் காணமுடியாதது.

சவீதா பல்மருத்துவக்கல்லூரிக்குப் பிறகு சவீதா செவிலியர் கல்லூரி, சவீதா பிசியோதெரபி கல்லூரி, சவீதா ஆக்குபேசனல் தெரபி, சவீதா பொறியியல் கல்லூரி ஆகியவை தொடங்கப்பட்டு மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இக்கல்லூரி நிறுவனங்களை உள்ளடக்கி **18–03–2005** அன்று, மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு சவீதா பல்கலைக்கழகம் தோன்றியது. டாக்டர் வீரையன் அவர்களின் ஓய்வறியா உழைப்பும், அபார திறமையும், சீரிய தலைமையும், சிறந்த கட்டமைப்பும் வசதிகளும் கொண்ட கல்வி நிறுவனங்கள் மூலம் உலகத்தரம் வாய்ந்த, சிறந்த கல்வியைக் குறைந்த கட்டணத்தில் அளிக்க வேண்டும் என்ற உயர்ந்த லட்சிய நோக்குமே இந்த வியத்தகு சாதனை புரிந்திடக் காரணமாயிருந்தன.

டாக்டர் வீரையன் அவர்களின் பெருமுயற்சியால், இக்கல்வியாண்டில் **(2008–2009)** மேலும் ஒரு சாதனை மகுடமாக சவீதா மருத்துவக்கல்லூரி துவங்கப்பட்டுள்ளது. **130** ஏக்கரில் பல்கலைக்கழக வளாகத்தில் **5.6** லட்சம் சதுர அடி பரப்பளவுள்ள கட்டிடங்களோடு செயல்பட்டு வரும் சவீதா மருத்துவக்கல்லூரியின் பொது மருத்துவமனை தற்போது **200** படுக்கைகள் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. விரைவில் இது **750** படுக்கைகள் கொண்டு, இந்தியாவின் சிறந்த அதிநவீன வசதிகளும், கட்டமைப்பும் கொண்ட, அனைத்து சிறப்புப்பிரிவுகளையும் தலை சிறந்த மருத்துவர்களையும் கொண்ட மருத்துவமனையாக விளங்க திட்டமிடப்பட்டுள்ளது. இங்குள்ள முதலாம் ஆண்டு மருத்துவப்படிப்பிற்கான வசதிகள் மற்றும் கட்டமைப்பு வேறு எந்தக்கல்லூரியிலும் காண முடியாத அளவுக்கு மிகச்சிறப்பாக உள்ளன.

இந்தியாவிலேயே முதன்முறையாக சவீதா பல்கலைக்கழகத்தில் வாய் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு இந்நோய் பற்றிய விழிப்புணர்வு ஊட்டுவதுடன் ஏழைகளுக்கு இலவச சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. மேலும் இப்பல்கலைக்கழகத்தில் மிருக ஆராய்ச்சி மையம் ஒன்று அமைக்கப்பட்டு, ஆராய்ச்சி

மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக உள்ளது. B.L,., MBA.,MCA., போன்ற பட்டப்படிப்புகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

டாக்டர் வீரையன் அவர்கள் சிறந்த கல்வியாளராக மட்டும் இல்லாமல் சமுதாய சேவை மற்றும் சமூக சேவையிலும் முன்னணியில் நின்று அனைவரது பாராட்டையும் பெற்றுள்ள சிறப்புக்குரியவர். ஆண்டுதோறும் நம் சமுதாய மாணவர் ஒருவரை பொறியியல் பட்டப்படிப்பில் முற்றிலும் இலவசமாகப்படிக்க வைப்பதுடன், தகுதியுள்ள, வசதியற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையும், சலுகைகளும் வழங்கி வருகிறார்.


மத்திய அரசின் IAS தேர்வுக்கான இலவசப் பயிற்சியையும் அளித்து வருகிறார். காலிங்கராயன் அறக்கட்டளையின் தலைவராகவும் அரும்பணியாற்றி வருகிறார்.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப்பின் ஒரு பெண் இருக்கிறார் என்ற பொன்மொழிக்கேற்ப டாக்டர் வீரையன் அவர்களின் வெற்றிகளுக்கும், சாதனைகளுக்கும் முதுகெலும்பாகவும், பெருந்துணையாகவும் உள்ளவர் இவருடைய மனைவி திருமதி வி.சரஸ்வதி அவர்கள். இவர் சவீதா அறக்கட்டளையின் துணைத்தலைவராகவும் உள்ளார். இத்தம்பதியருக்கு டாக்டர் சவீதா என்ற மகளும் டாக்டர் வி.தீபக் நல்லசாமி என்ற மகனும் உள்ளனர். மகள் டாக்டர் சவீதா முதுநிலை மருத்துவப்பிரிவில் (M.D. in Radio - Diagnosis) தங்கப்பதக்கம் வென்றவர். பல்கலைக்கழக இணைவேந்தராகவும், மாணவர் சேர்க்கை இயக்குநராகவும் மிகச்சிறப்பாகப்பணியாற்றி தந்தையின் புகழுக்கு மேலும் புகழ் சேர்த்து வரும் இவரது கணவர் டாக்டர் எஸ்.ராஜேஸ் குழந்தை நல மருத்துவர். மகன் டாக்டர். தீபக் நல்லசாமி இளநிலை மருத்துவப்படிப்பில் “Best outgoing Student’ விருது பெற்றவர். முதுநிலை பட்டப்படிப்பை முடித்து, முதுநிலை மேற்படிப்பினை கனடாவில் உள்ள டொரண்டோ பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறார். இவர் சவீதா பல்கலைக்கழக கல்வியியல் இயக்குநராக உள்ளார். இவரது மனைவி திருமதி ரம்யா M.Tech., கனடாவில் Ph.D., ஆய்வு செய்து வருகிறார். ஒரு விதையாக இருந்த பல் மருத்துவக்கல்லூரி டாக்டர் வீரையன் அவர்களின் கடின உழைப்பாலும், தீவிர முயற்சியாலும் கிளைத்து, தழைத்து இன்று மாபெரும் சவீதா பல்கலைக்கழகம் என்ற விருட்சகமாய் வேரூன்றி நிற்கின்றது.

சமுதாய சேவை, மருத்துவ சேவை, கல்விப்பணி ஆகியவற்றில் வியத்தகு சாதனைகள் புரிந்து தமிழகத்திற்கும், கொங்கினத்திற்கும் பெரும் பெருமை சேர்த்துள்ள, மனிதநேயம், எளிமை, கொடையுள்ளம், இன்சொல், பிறர்க்குதவும் பேருள்ளம் போன்ற அருங்குணங்களின் சொந்தக்காரராகவுள்ள டாக்டர் என்.எம்.வீரையன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு மாமணி’விருது வழங்கி பெருமை கொள்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு மாமணி



## ஆடிட்டர் மு.பாலசுப்பிரமணியம்

தமிழக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு கொங்கு வேளாளக் கவுண்டர்கள் வகுப்பைக் கொண்டதாகும். சுமார் 1.5 கோடி கொங்கு வேளாளர் உள்ள இந்தச் சமுதாயத்தில் இன்னும் பெரும்பாலார் பொருளாதாரத்திலும், கல்வியிலும், வாழ்க்கைத்தரத்திலும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். இத்தகைய கொங்கு சமுதாயத்தை மேம்படுத்த பாடுபட்டவர், சமுதாயத் தலைவர்களில் ஒருவரான ஆடிட்டர் திரு.மு.பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆவார்.

1942 ஆம் ஆண்டு தாராபுரம் அருகில் உள்ள சிக்கனாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சி.முத்துசாமி – திருமதி சிவகாமி தம்பதியரின் மகனாகப் பிறந்தவர் ஆடிட்டர் மு.பாலசுப்பிரமணியம் அவர்கள்.

தாராபுரம் – சிக்கனாபுரம் கிராமப் பள்ளியில் 3 ஆம் வகுப்பு வரையிலும், ஈரோடு கோட்டைப்பள்ளியில் 5 ஆம் வகுப்பு வரையிலும், ஈரோடு லண்டன் மிஷன் பள்ளி (சி.எஸ்.ஐ.பள்ளி) யில் 6 ஆம் வகுப்பும், பவானி அரசு உயர்நிலைப்பள்ளியில் 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளும், ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பும், தாராபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி (SSLC) படிப்பும் முடித்தார். பவானி அரசு உயர்நிலைப்பள்ளியில் இவருடைய ஆசிரியராக இருந்தவர், கொங்கு மாவீரன் தீரன் சின்னமலையைப் பற்றி முதன் முதலாக நூல் வெளியிட்டு மறைக்கப்பட்டிருந்த தீரன் சின்னமலையின் வீர வரலாற்றை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தவரும். இராவண காவியம் எழுதி பெரும் புகழ் பெற்றவருமான புலவர் குழந்தை அவர்கள் ஆவார்.

சென்னை கிருத்துவக் கல்லூரியில் PUC படிப்பையும், கோவை பூ.சா.கோ. (PSG) கலைக்கல்லூரியில் B.Sc., (புள்ளியியல்) பட்டப்படிப்பையும் முடித்தார். ஆடிட்டர் (பட்டயக்கணக்காளர்) படிப்பையும், பயிற்சியினையும் Fraser & Ross நிறுவனத்தில் பெற்றார்.

பள்ளி மற்றும் கல்லூரி நாட்களிலேயே கொங்கின உணர்வும், பற்றும் கொண்டவராக விளங்கினார். கொங்கு மாணவர்கள் சங்கக் கூட்டங்களிலும், கொங்கு மாணவர்கள் மாநாட்டிலும் கலந்துகொண்டு கொங்கினத்தை முன்னேற்ற வேண்டும் என்ற உறுதி பூண்டவராக விளங்கினார்.

1970 ஆம் ஆண்டு பட்டயக்கணக்காளராக சேவை செய்யத் துவங்கியதிலிருந்து வேறு யாரும் செய்ய முடியாத அளவுக்கு, கொங்கு வேளாள இனத்தைச்சேர்ந்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்த பெருமை இவரைச் சேரும். பட்டயக்கணக்காளராக சேவை செய்த பொழுது, கொங்கு வேளாளர் இனத்தைச் சேர்ந்த தொழிலதிபர்களுக்கு இலவசமாக சேவை அளித்துக் கொண்டிருக்கின்ற பெருமை கொண்டவர் இவர்.

பல்வேறு கொங்கு வேளாளர் அமைப்புகளில் தீவிர பங்கு கொண்டு கொங்கு சமுதாய வளர்ச்சிக்குப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார். கொங்கு வேளாளர் சங்கங்கள் மற்றும் அமைப்புகள் நடத்திய மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் பெரும் பங்கு கொண்டவர் இவர். தமிழக அரசியல் தலைவர்கள், கொங்கு சமுதாயத்தலைவர்கள் பெரும்பாலோரின் அன்பையும், பெருமதிப்பையும் பெற்ற சிறப்புக்குரியவர். கொங்கு சமுதாய அமைப்புகள் சார்பாக அரசிடம் தூது செல்லும் மற்றும் பேச்சு வார்த்தை நடத்தும் குழுக்களில் இடம் பெற்று தன் பங்கைத் திறம்பட ஆற்றிய பெருமைக் குரியவர்.

1992 ஆம் ஆண்டு இட ஒதுக்கீடு பிரச்சனைக்காக ஈரோட்டில் நடத்தப்பட்ட கொங்குப் பேரவை மாநாட்டில் கொங்கு சமுதாயத்தின் பெருந்தலைவர் அமரர் கோவை செழியன் அவர்கள் தலைமையில் சேலம் மாவட்டச்செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர் கூடுதல் பொறுப்பாக தருமபுரி மாவட்டச் செயலாளராகவும் பொறுப்பேற்று மாவட்டமெங்கும் சங்கங்கள் அமைத்து, சமுதாய விழிப்புணர்வு ஊட்டி, உறங்கிக்கிடந்த சமுதாய மக்களைத் தட்டியெழுப்பி கொங்கின ஒற்றுமைக்கு வழிவகுத்தார். நாமக்கல் நகரில் நடந்த கொங்குப் பேரவை மாநாட்டிற்குப் பின்னர் கொங்குப் பேரவையின் மாநில இணைப்பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்று, அனைத்து கொங்கு சொந்தங்களும் பாராட்டும்படி, பணியாற்றினார். கரூர் நகரில் நடந்த கொங்குப் பேரவை மாநாட்டின் போது பேரவையின் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றினார். இந்த மாநாடுகளின் வெற்றிகளுக்கு இவரின் சிறப்பான பங்களிப்பும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

1995 ஆம் ஆண்டு தமிழ் தேசிய கட்சி என்ற கொங்கு வேளாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கட்சியின் செயலாளராகப் பொறுப்பேற்று, தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்து கட்சியை வளர்க்கப் பாடுபட்டார்.


பின்தங்கிய சேலம், தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த கொங்கு வேளாளர் கல்லூரிப் பெண்களுக்கு தொடர்ந்து கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறார். தனது நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புகளில் உறவினர்கள் இல்லாத கொங்கு வேளாளர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு உயர் பதவிகள் வழங்கிப் பெருமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

தற்போது கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவையின் கௌரவத் தலைவராகப் பொறுப்பு வகிக்கிறார்.

1972 ஆம் ஆண்டில் இவருடைய திருமணம் நடைபெற்றது. இவருடைய சமுதாய, பொது வாழ்விற்குப் பெரிதும் துணைநிற்பவர் இவருடைய மனைவி திருமதி சுப்புலக்குமி அவர்கள். இத்தம்பதியருக்கு கல்யாண்குமார், தினேஷ்குமார் என்ற இரு மகன்கள் உள்ளனர். கல்யாண்குமார் அமெரிக்காவில் எம்.எஸ்.முடித்துவிட்டு அங்கேயே பணியில் உள்ளார். தினேஷ்குமார் எம்.பி.ஏ. படித்துள்ளார்.

கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையின் ஆரம்ப கால வளர்ச்சிக்கு வித்திட்ட ஆடிட்டர் திரு. மு.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘‘கொங்கு மாமணி’’விருதை வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖



# கொங்கு மாமணி



## ப.செங்கோடன்

போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டு 45 ஆண்டுகள் சிறப்பான சேவை புரிந்து சாதனைகள் பல செய்து புகழ்பெற்று விளங்கி வருபவர் தொழிலதிபர் திரு.ப.செங்கோடன் அவர்கள்.

1946 ஆம் ஆண்டு நாமக்கல் நகரில் திரு. பழனி கவுண்டர் – திருமதி நாச்சம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பள்ளிப்படிப்பை நாமக்கல் அரசு உயர்நிலைப்பள்ளியில் முடித்த பிறகு லாரி மெக்கானிக்காக தொழிலைத் தொடங்கி, ஓட்டுனராகப் பணியாற்றி தன் அயராத உழைப்பினால் படிப்படியாக உயர்ந்து, இன்றைய தினம் ஏராளமான லாரி, டிரெய்லர் மற்றும் எல்பிஜி டேங்கர் லாரிகளுக்குச் சொந்தக்காரராக விளங்கி வருகிறார்.

இவர் 1965 ஆம் ஆண்டு திருமணம் புரிந்து கொண்டார். இவருடைய முன்னேற்றத்தில் பெரும் பங்கு கொண்டவர் இவருடைய மனைவி திருமதி தங்கம்மாள் ஆவார். இத்தம்பதியருக்கு வளர்மதி, சுமதி ஆகிய மகள்களும், அருள்ராஜ் என்ற மகனும் உள்ளனர்.

லாரி உரிமையாளர்களின் வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டு நாமக்கல் வட்ட லாரி உரிமையாளர்கள் சங்கம் ஆரம்பித்த 1970 ஆம் ஆண்டு அதன் முதல் உறுப்பினராகப்பதிவு செய்து, பின்னர் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்று, 1975 – 1977 ல் உதவித் தலைவராகப் பொறுப்பேற்று சங்கத்திற்காகப் பாடுபட்டுள்ளார். 1981 ஆம் ஆண்டு இச்சங்கத்தின் தலைவர் பொறுப்பை ஏற்றார். தலைவர் பொறுப்பேற்ற நாள் முதல், பல அரிய சேவைகளைச் சங்கத்திற்காக செய்து வருகிறார். இந்தியா முழுவதும் நாமக்கல் என்றாலே லாரி தொழில் என்று பெயர் விளங்கும் அளவுக்கு இச்சங்கத்திற்காகப் பாடுபட்டு வருகிறார். மேலும் பொருளாதாரத்திலும், இந்தியாவிலேயே மிகப்பெரிய சங்கமாக விளங்கக் கூடிய அளவில் இச்சங்கத்தின் நிதிநிலையை வளர்த்துள்ளார் என்பது சிறப்பு மிக்கச் செய்தியாகும்.

மக்கள் தொண்டு, சமுதாய சேவை, தொழில் முனைவோருக்கு உதவிகள் புரிதல் போன்றவற்றில் சிறந்து விளங்கும் இவர் தமிழ்நாடு மாநில லாரி உரிமையாளர் சம்மேளனத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளதுடன், மேலும் பல பொறுப்புகளையேற்று திறம்படப் பணியாற்றி வருகிறார். நாமக்கல் ஆட்டோ நகர் சங்கத்தின் கௌரவத் தலைவராகவும், நாமக்கல் நகராட்சித் துவக்கப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகப் பொருளாளராகவும், நாமக்கல் நகர முன்னேற்றக் குழு தலைவராகவும், நாமக்கல் மாவட்ட பெட்ரோலியம் டீலர்ஸ் சங்க நிறுவனத் தலைவராகவும், தென்மாநில சரக்கு வாகன உரிமையாளர்கள் சங்கங்களின் பேரவையின் துணைத்தலைவராகவும், நாமக்கல் மாவட்ட கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவையின் கௌரவத்தலைவராகவும், நாமக்கல் கொங்கு நாட்டு வேளாளர் சங்கத்தலைவராகவும், நாமக்கல் மாரியம்மன் கோவில் திருப்பணிக் குழுவின் கௌரவத்தலைவராகவும் பொறுப்பேற்று, அனைவரும் பாராட்டும்படி சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

1989 ஆம் ஆண்டு தமிழக அரசின் திட்டக்குழுவில் டிரான்ஸ்போர்ட் கமிட்டி உறுப்பினராகவும், 1988 – 89 ல் தமிழக அரசின் சாலைவளர்ச்சி மேம்பாட்டு நிதி கண்காணிப்புக்குழு உறுப்பினராகவும், 2000 ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்ட போக்குவரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத்திட்டக் கண்காணிப்புக் குழு உறுப்பினராகவும், 2002 ஆம் ஆண்டு தமிழக அரசின் 10 வது ஐந்தாண்டு திட்ட போக்குவரத்துக் குழு உறுப்பினராகவும், 2002 ஆம் ஆண்டு நாமக்கல் பை–பாஸ் நான்குவழிப்பாதை அமைக்கும் திட்டக்குழு உறுப்பினராகவும், 2004 ஆம் ஆண்டு மத்திய அரசின் நிதித்துறையில் சேவைவரி ஆலோசனைக்குழு உறுப்பினராகவும், 2004 ஆம் ஆண்டு மாவட்ட மரபு சாரா எரிசக்தித்துறை செயல்திட்ட உறுப்பினராகவும் பொறுப்பேற்றுத் திறம்பட பணியாற்றியுள்ளார்.

நாமக்கல் டிரெய்லர் உரிமையாளர் சங்கத்தின் நிறுவனர் தலைவராகவும், நாமக்கல் சதர்ன் ரீஜியன் பல்க் எல்.பி.ஜி. டிரான்ஸ்போர்ட் ஓனர்ஸ் அசோஸியேஸன் நிறுவனச் செயலாளராகவும், புது டெல்லி ஆல் இண்டியா மோட்டார் டிரான்ஸ்போர்ட் காங்கிரஸ் தலைவராகவும் பொறுப்புகள் வகித்த பெருமைக்குரியவர் இவர். இந்திய அளவில் நாமக்கல் நகருக்குப் பெருமை சேர்த்ததில் இவருக்குப் பெரும் பங்குண்டு.

இவருடைய சாதனைகளைப்பாராட்டி பல விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. 1989 ஆம் ஆண்டு புதுடெல்லியில் ஆல் இண்டியா மோட்டார் டிரான்ஸ்போர்ட் காங்கிரஸ்

பொன்விழாவில் இவருக்கு ''டிரான்ஸ்போர்ட் யுவா'' என்ற விருது வழங்கப்பட்டது. 1997 ல் புது டெல்லியில் நடைபெற்ற ஆல் இண்டியா மோட்டார் டிரான்ஸ்போர்ட் காங்கிரஸ் வைர விழாவில் இவருக்கு 'டிரான்ஸ்போர்ட் ரத்னா' விருது வழங்கப்பட்டது. 1997 ல் நாமக்கல் ரோட்டரி சங்க விழாவில் 'போக்குவரத்துத் தொழில் முன்னோடி' என்ற விருது இவருக்கு வழங்கப்பட்டது. 1997 ல் நாமக்கல் ஜீனியர் சேம்பர் சங்கத்தின் சார்பாக இவருக்கு 'நகரின் சிறந்த மூத்த குடிமகன்' விருது வழங்கப்பட்டது. 1998 ல் பெங்களூர் சிட்டி லாரி டிரான்ஸ்போர்ட் ஏஜென்ட்ஸ் சங்கத்தின் சார்பில் 'தமிழ்நாடு சாரீக ரத்னா விருது' இவருக்கு வழங்கப்பட்டது. 1998 ல் நாமக்கல் பௌல்ட்ரி டவுன் ரோட்டரி சங்கம் சார்பாக சர்வதேச ரோட்டரி சங்க விருது "For the Sake of Honour" விருது இவருக்கு வழங்கப்பட்டது. நாமக்கல் தெற்கு லைன்ஸ் கிளை சார்பாக இவருக்கு 'நாமக்கல் நாயகன்' என்ற விருது வழங்கப்பட்டது. 1999ல் புது டெல்லியில் ஆல் இண்டியா மோட்டார்ஸ் டிரான்ஸ்போர்ட் காங்கிரஸின் 63 வது நிறைவு விழாவில் இவருக்கு 'டிரான்ஸ்போர்ட் சாம்ராட்' என்ற மிக உயரிய விருது வழங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு நாமக்கல் டிரெய்லர் உரிமையாளர் சங்கத்தின் சார்பில் இவருக்கு 'டிரான்ஸ்போர்ட் விடிவெள்ளி' என்ற விருது வழங்கப்பட்டது.

கொங்கு சமுதாய வளர்ச்சியில் மிக்க அக்கறை கொண்டுள்ள இவர், கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவை நடத்திய பேரணிகளிலும், பொதுக்கூட்டங்களிலும் கலந்துகொண்டதோடு, அவைகளின் வெற்றிக்கும் பல வகைகளில் உதவி செய்தவர். எளிமை, இனிய சொல், அயரா உழைப்பு, நாடிவரும் கொங்கு சொந்தங்களுக்கு இல்லையென்று கூறாமல் முடிந்த உதவிகளைச் செய்யும் மனிதநேயம், அனைவரிடத்திலும் அன்பு காட்டுதல், லாரி தொழிலில் ஈடுபட்டு நலிந்தோர்க்கு சங்கத்தின் மூலம் தக்க உதவிகள், தக்க சமயத்தில் செய்யும் தாயுள்ளம் போன்ற அருங்குணங்களின் ஒட்டுமொத்த சொந்தக்காரராக விளங்கும் இவர் பிறருக்காக ஓடியாடி ஓய்வில்லாமல் உழைப்பதில் சலிக்காத பேருள்ளம் கொண்டவர்.

சாதனைகள் பல நிகழ்த்தி, கொங்கு சமுதாயத்திற்கும், குறிப்பாக நாமக்கல் நகருக்கும் பெரும் பெருமை சேர்த்துள்ள திரு. ப.செங்கோடன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ''கொங்கு மாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

## கொங்கு சாதனையாளர்


2007 ஆம் ஆண்டு விருது அளித்துச் சிறப்பிக்கப் பட்டவர்கள்

### கொங்கு சாதனையாளர் விருது

| | | |
|---|---|---|
| 1. | திரு. கே.பாலசுப்பிரமணியன் | சிறந்த தொழிலதிபர் மற்றும் சமுதாயப்பணி |
| 2. | திரு. ஆர்.தமிழ்மணி | சிறந்த அரசுப்பணி மற்றும் கல்விப்பணி |
| 3. | Dr. விமலா இராமலிங்கம் | சிறந்த மருத்துவப்பணி மற்றும் சமுதாயப்பணி |
| 4. | திரு. கே.கே.வேலுசாமி | சிறந்த தொழில் மற்றும் முதியோர் நலப்பணி |
| 5. | திரு. எஸ்.டி.சந்திரசேகர் | சிறந்த கல்விப்பணி |
| 6. | திரு. பி.முத்துசாமி | சிறந்த தொழிலதிபர் மற்றும் சமுதாயப்பணி |
| 7. | திரு. எஸ்.பெருமாள் | சிறந்த பல்கலைக்கழகப்பணி |
| 8. | Dr.K.S.K. வேலுமணி | சிறந்த அரசுப்பணி மற்றும் சமுதாயப்பணி |
| 9. | Dr. R.ஞானம் | சிறந்த வேளாண் கல்விப்பணி |
| 10. | திரு. எம்.சிவசண்முகம் | சிறந்த நகர மேம்பாட்டுப்பணி |
| 11. | திரு. இ.டி.இராஜமாணிக்கம் | சிறந்த சமுதாயப்பணி |
| 12. | திருமதி ருக்மணி மாரப்பன் | சிறந்த கல்விப்பணி மற்றும் சமுதாயப்பணி |
| 13. | திரு. எம்.குமரகவுண்டர் | சிறந்த தொழிலதிபர் மற்றும் சமுதாயப்பணி |
| 14. | Dr. சித்ராதேவி ஜெகநாதன் | சிறந்த மருத்துவப்பணி |
| 15. | திரு. ஏ.கே.பி.சின்ராஜ் | சிறந்த தொழிலதிபர் மற்றும் சமுதாயப்பணி |
| 16. | திரு. விசா எம்.சண்முகம் | சிறந்த சமுதாயப்பணி |

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## வி.கே. இராமசாமி

விவசாயிகளுக்காக சங்கத்தை ஆரம்பித்து கடந்த 35 ஆண்டுகளாக பல்வேறு போராட்டங்களையும், பல கூட்டங்களையும் நடத்திக் கொண்டு வருபவர்தான் திரு.வி.கே.ராமசாமி அவர்கள். இவர் தமிழ்நாடு மாநில விவசாய சங்கத்தின் செயலாளராகப் பொறுப்பேற்று விவசாயிகள் நலனுக்காக அயராது பாடுபட்டு வருகிறார்.

கரூர் மாவட்டம் பரமத்தி அருகில் உள்ள வேலம்பாளையம் முன்னூர் கிராமத்தில் திரு.கந்தசாமிக்கவுண்டர் – திருமதி வஞ்சியாத்தாள் தம்பதியருக்கு மகனாகப்பிறந்தவர், 74 வயது வி.கே.இராமசாமி அவர்கள். கொடுமுடி எஸ்எஸ்வி உயர்நிலைப்பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்த இவர் மதுரை கல்லூரியில் தமிழ் புலவர் பட்டமும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ (காந்தீயச் சிந்தனைகள்) பட்டமும் பெற்றார். பத்திரிக்கைத் துறையில் பட்டயம் பெற்றுள்ள இவர், 'ஏர் உழவன்' என்ற பத்திரிக்கையின் துணை ஆசிரியராக 20 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். இவருடைய மனைவி திருமதி வி.கே.ஆர். விஜயா, கணவரின் சமுதாயப்பணிக்குத் துணையாக விளங்குகிறார்.

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில விவசாய சங்கம் திரு.சி.முத்துசாமி கவுண்டர், அரூர் முத்துக்கவுண்டர், அரூர் திரு.டி.என்.தீர்த்தகிரி கவுண்டர், திரு.ஆர்.கிருஷ்ணசாமி கவுண்டர் முதலான கொங்கு தலைவர்களால் துவக்கப்பட்டது. அதன் முதல் செயலாளராகப் பொறுப்பேற்று, சங்க ஆதரவில் வெளிவந்த "ஏர் உழவன்' வார இதழ் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றியவர், திரு.வி.கே.இராமசாமி அவர்கள்.

1972 பெங்களூரில் துவங்கப்பட்ட அகில இந்திய விவசாயச் சங்கத்தின் துணைச்செயலாளராக இவர் பணியாற்றி உள்ளார்.

இன்றும் தமிழ்நாடு மாநில விவசாய சங்கப் பொதுச்செயலாளர், தமிழ்நாடு சர்வோதய மண்டலின் துணைச்செயலாளர், அகில இந்திய விவசாயிகள் சங்க இணைச்செயலாளர், கோவை மாவட்ட நுகர்வோர் கவுன்சில் தலைவர், மக்கள் மன்ற மாநில உறுப்பினர், மனித

நேயப்பேரவை உப தலைவர், தமிழக அரசின் விவசாயிகள் முறையீட்டுக் கூட்ட உறுப்பினர், பட்டிவிநாயகர் அறக்கட்டளை செயலாளர், சர்வ சமய நல்லுறவுக் குழு உறுப்பினர், திருஞான சம்பந்தர் அறக்கட்டளை இணைச்செயலாளர் எனப் பல பொறுப்புகளையேற்று திறம்பட செயல்பட்டு வருகிறார்.

கடந்த 60 ஆண்டுகளாக பொது வாழ்வில் ஈடுபட்டு மக்கள் நலனுக்காகவும், விவசாயிகள் நலனுக்காகவும் தமிழகத்தின் பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்கள், சமயச்சான்றோர்கள், சன்மார்க்கிகள், சர்வோதய, காந்திய அமைப்பினர் ஆகியோரிடையே இணைந்து செயல்பட்டு, சீரிய பணிகளாற்றி வருகிறார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கோவை செழியன் போன்ற தலைவர்களுடன் நெருங்கிப்பழகி, அவர்களின் பேரன்பைப் பெற்றவர்.

பலமுறை போராட்டங்களில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு சிறை சென்றுள்ளார். மத்திய, மாநில அமைச்சர்களை அவ்வப்போது சந்தித்து, கோரிக்கைகளையும், குறைகளையும் தெரிவித்து முடிந்தவரை விவசாயிகளின் நலன்களைப் பேணிப்பாதுகாப்பதில் பெரும் அக்கறை கொண்டவர். பல விவசாயிகள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி, அனைத்து விவசாயிகளின் ஒட்டுமொத்தப்பாராட்டையும் பெற்றவர் இவர்.

1977 ஆம் ஆண்டு குடகனாற்றில் பெரும் வெள்ளம் வந்து அழகாபுரி அணை உடைந்து ஆயிரக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டபோது, இவர் உடனே அங்கு விரைந்து சென்று நிவாரண உதவிகளை மேற்கொண்டார். கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி தொகுதியில் பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் 750 வீடுகளை பல லட்சம் ரூபாய் செலவில் கட்ட ஏற்பாடு செய்தார். அதற்காக அமெரிக்காவின் காசா என்ற அமைப்பும், தமிழ்நாடு சர்வோதய மண்டலும் இவரோடு இணைந்து செயல்பட்டன.

சர்வசமய பாதயாத்திரையை 1994–1995 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து ஜப்பான் நாட்டின் ஹிரோசிமா, நாகசாகி நகர் வரை மேற்கொண்ட குழுவில் பங்கேற்ற சிறப்பு பெற்றவர் இவர். கிராப்புற மேம்பாடு, கோயில் குடமுழுக்கு விழாக்கள் போன்றவற்றிலும் ஈடுபாடு கொண்டுள்ளவர்.

விவசாயிகளின் நலனுக்காக தன்னுடைய வாழ்வையே அர்ப்பணித்துக்கொண்டு எளிமை, நேர்மை, காந்தீய கோட்பாடு, துணிவு ஆகிய அரிய குணங்களைக் கொண்டு வாழ்ந்துவரும் இந்த விவசாயிகளின் தோழன், காந்தியவாதி, சர்வோதயமார்க்கி, லட்சியப்போராளி திரு. வி.கே.இராமசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## அட்லஸ் எம்.நாச்சிமுத்து

திரு. அட்லஸ் எம்.நாச்சிமுத்து அவர்கள் கரூரிலிருந்து சுமார் 13 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மருதம்பட்டி என்னும் சிறிய ஊரில் விவசாயக் குடும்பத்தில் திரு.மாரப்ப கவுண்டர் – திருமதி நல்லம்மாள் ஆகியோரின் மகனாக 1943 ஆம் ஆண்டு பிறந்தார்.

தனது பள்ளிப்படிப்பை வெள்ளியனை மற்றும் கரூர் அரசுப்பள்ளிகளில் முடித்தார். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பதற்கேற்ப மாணவப் பருவத்திலேயே தம் திறமைகளை வெளிப்படுத்தினார். பின்பு பொள்ளாச்சியில் நாச்சிமுத்து தொழில் நுட்பக்கல்லூரியில் இயந்திரவியலில் DME பட்டம் பெற்றார்.

படித்து முடித்தவுடன் கரூரில் 1965 ஆம் ஆண்டு குறைந்த முதலீட்டில் சுயமாகத் தொழில் தொடங்கும் முயற்சியாக ஒரு மின்சார அங்காடியை (Electrical Stores) தொடங்கினார். 1972 ல் கரூர் சிட்பண்ட்ஸ், கரூர் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிதி நிறுவனங்களைத் தொடங்கினார். 1975 ல் அட்லஸ் பேப்ரிக்ஸ் என்ற நிதி நிறுவனத்தைத் துவங்கி உள்நாட்டுத் தேவைகளுக்கான துணிகளை உற்பத்தி செய்து விற்றார். 1978 ல் அட்லஸ் எக்ஸ்போர்ட் எண்டர்பிரைசஸ் என்ற ஏற்றுமதி நிறுவனத்தைத் தொடங்கி, வீட்டு உபயோகத்திற்குத் தேவையான துணிகளை ஐரோப்பிய, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு மிகச்சிறப்பான முறையில் ஏற்றுமதி செய்து வருகிறார். இந்நிறுவனம் தற்போது கரூர் நகரில் மிகவும் பிரசித்திபெற்ற முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக இயங்கி வருகிறது.

உலகின் பல நாடுகளுக்கு வியாபார நிமித்தமாக சென்று வந்துள்ளார், இந்த வெற்றிகரமான தொழிலதிபர். கடந்த 15 ஆண்டுகளாக கரூர் ஏற்றுமதியாளர் அமைப்பின் பொருளாளர், 9 ஆண்டுகளாக கைத்தறி நெசவாளர் மேம்பாட்டு கூட்டமைப்பின் (HEPC) உயர்மட்ட செயற்குழு உறுப்பினர் போன்ற பல பொறுப்புகளையேற்று, மிகச்சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். கொங்கு கல்வி அறக்கட்டளையின் பொருளாளராக 6 ஆண்டுகள்

பணியாற்றிய இவர், 2007 ஆம் ஆண்டு முதல் அந்த அறக்கட்டளையின் தலைவராகப் பொறுப்பேற்று சீரிய கல்விப் பணிகளை ஆற்றி வருகிறார்.

கொங்கு கல்வி அறக்கட்டளைத் தலைவராகப் பொறுப்பேற்ற உடனே, இவர் சுமார் மூன்று கோடி ரூபாய் நன்கொடை வசூல் செய்து பள்ளிகள் மற்றும் கல்லூரிக்கு நீண்ட நாட்களாகத் தேவைப்பட்ட கலையரங்கம் ஒன்றினை கல்லூரி வளாகத்தில் கட்டிமுடித்தார். சுமார் ஒன்றரை கோடி ரூபாயில் 2000 பேர் அமரும் வண்ணம் மிகவும் பிரமாண்டமாய்க் கட்டப்பட்டுள்ள 'அட்லஸ்' கலையரங்கம் இவரது அயரா உழைப்பிற்கும், விடா முயற்சிக்கும், கல்விப்பணிக்கும் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. கொங்கு உயர்நிலைப்பள்ளி ஒன்றும் 2007 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அறக்கட்டளைக்கு பெரிய அளவில் நன்கொடையளித்து, கொங்கினப் பண்பாட்டிற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறார்.


அறக்கட்டளையின் கீழ் செயல்பட்டுவரும் கொங்கு கலை அறிவியல் கல்லூரி, கொங்கு வெள்ளாளர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கொங்கு உயர்நிலைப்பள்ளி ஆகியவை கரூர் மாவட்டத்தில் சிறந்த கல்வி நிறுவனங்களாகத் திகழ்வது இவரது சீரிய தலைமைக்கும், திறமைக்கும் சான்று பகர்கின்றன. இவரது தலைமைப்பண்புகள், ஆற்றல், செயல்திறமை, அயரா உழைப்பு, பொதுநலநோக்கு, கருணையுள்ளம், சமூகத் தொண்டு ஆகியவற்றைத் கருத்தில் கொண்டு, கரூரில் அரசின் திட்டப்படி ரூ. 120 கோடியில் அமைக்கப்பட்டு வரும் 'டெக்ஸ்டைல் பார்க்' என்ற அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், அதை ஒரு சிறந்த தொழிலியல் பூங்காவாக உருவாக்குவதற்கு அல்லும் பகலும் அரும்பணியாற்றி வருகிறார்.

இவரது மனைவி பெயர் கஸ்தூரி. இத்தம்பதியருக்கு என். செந்தில் பிரசாத் என்ற மகனும், சுகந்தி என்ற மகளும் உள்ளனர். இங்கிலாந்தில் MBA பட்டம் பெற்ற இவரது மகன் செந்தில் தந்தைக்கு உறுதுணையாக நிறுவனப் பணிகளை மேற்கொண்டு வருகிறார். "கொங்கு சாதனையாளர்" விருது பெற்ற இவரது மருமகன் திரு. எஸ்.சுசீந்திரன் அவர்கள் சபரி இண்டர்நேஷனல் லிமிடெட் என்ற பன்னாட்டு நிறுவனத்தை அனைவரும் வியக்கும் வண்ணம் கரூரில் மிக வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

சமுதாயப்பணி மற்றும் கல்விப்பணியில் பெரிதும் ஈடுபாடு கொண்டு தொழிற்துறையில் சாதனைகள் பல படைத்துள்ள திரு. அட்லஸ் நாச்சிமுத்து அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கி மகிழ்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் ஆ. முருகநாதன்

பொள்ளாச்சி, செட்டிகாபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சி.எஸ்.ஆறுமுகம் – திருமதி பழனியம்மாள் தம்பதியருக்கு 1951 ஆம் ஆண்டு பிறந்தவர், டாக்டர் ஆ.முருகநாதன் அவர்கள்.

பள்ளிப்படிப்பை கோவை தூய மைக்கேல் பள்ளியிலும், புகுமுக வகுப்பை PSG கலைக்கல்லூரியிலும், MBBS பட்டப்படிப்பை 1974 ஆம் ஆண்டு ஸ்டேன்லி மருத்துவக்கல்லூரியிலும், MD (Gen Medicine) பட்டப்படிப்பை 1978 ஆம் ஆண்டு சென்னை மருத்துவக்கல்லூரி யிலும் முடித்தார். மாணவராக இருந்தபோது பேச்சுப்போட்டி, நடனப்போட்டி, கவிதைப்போட்டி ஆகியவைகளில் முதல் பரிசு வென்றார்.

தூய மைக்கேல் பள்ளியில் தமிழ் மன்றத் தலைவராகவும், PSG கலைக்கல்லூரியில் நாவலர் மன்றச் செயலாளராகவும் பணிபுரிந்த இவர் கடந்த 35 ஆண்டுகளாக தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் அளப்பரிய தொண்டு செய்துள்ளார்.

திருப்பூர் தமிழ்ச்சங்கத்தை நிறுவி, 1992 முதல் தொடர்ந்து 16 ஆண்டுகள் அதன் தலைவராக மிகச்சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தோடு இணைந்து திருப்பூர் தமிழ்ச்சங்கம், பல்வேறு இயல் இசை நாடக நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. குறிப்பாக கலைஞரின் சங்கத்தமிழ் நாட்டிய நாடகம் இன்று வரை சிறப்பாகப் பேசப்படுகிறது. திருப்பூர் தமிழ்ச்சங்கத்தின் மூலம் திருப்பூரில் உள்ள பள்ளிகளில் 12 ம் வகுப்பில் தமிழ்ப்பாடத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. கடந்த 16 ஆண்டுகளாக பல்வேறு கலைநிகழ்ச்சிகளையும், சொற்பொழிவுகளையும் திருப்பூர் தமிழ்ச் சங்கத்தின் மூலமாக வழங்கி, தமிழ்ப்பணியாற்றி வருகிறார், சங்கத்தின் மூலம் பல தமிழறிஞர்களுக்கு இலக்கிய விருதுகள் வழங்கி, தமிழ்த் தொண்டாற்றி வருகிறார். நலிந்த

கலைஞர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் இவர் நிதி உதவி செய்து வருகிறார்.

டாக்டர் முருகநாதன் அவர்களின் மேடைப்பேச்சுக்கு என்றே தனி ரசிகர் கூட்டம் உள்ளது. இலக்கிய விழாக்கள், ஆன்மீக விழாக்கள், கலைவிழாக்கள், மருத்துவ முகாம்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நகைச்சுவை ததும்பும், பயனுள்ள சொற்பொழிவுகளை ஆற்றியுள்ள இவர் சிறந்த எழுத்தாளரும் கூட.

'திருமணங்கள் திருத்தப்படவேண்டும்', 'மருந்து குறிப்புகள்' போன்ற நூல்களை எழுதியுள்ளார். திருப்பூரில் புத்தகக் கண்காட்சியை, தொடர்ந்து 10 நாட்கள் நடத்தி பலரின் பாராட்டையும் பெற்றவர் இவர். நூல்களை நன்கொடையாகக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டவர் இவர்.

மருத்துவத்துறையில் இவருடைய சாதனைகள் வியக்கவைப்பன. அனைத்திந்திய மருத்துவக்கழகத்தில் தமிழகம் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். மருத்துவத்துறையில் தமிழக அளவிலும், இந்திய அளவிலும் பல்வேறு பதவிகளையேற்று அரும் பணியாற்றி வருகிறார். தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழத்தின் ஆட்சி மன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று பணியாற்றும் பெருமை கொண்டவர் இவர்.

மருத்துவத்துறையில் இந்திய நாட்டின் மிக உயர்ந்த விருதான டாக்டர் பி.சி.ராய் விருதினை நமது குடியரசுத்தலைவர் அவர்களிடமிருந்து பெற்றுள்ளார். கௌமார மடப்பெரியவர் இவரது இலக்கியப்பணிகளைப் பாராட்டி 'இலக்கிய மருத்துவர்' என்ற பட்டம் வழங்கியுள்ளார். பேரூர் ஆதீனம் சாந்தலிங்க அடிகள் இவருக்கு 'மருத்துவப் புலவர்' என்ற பட்டம் வழங்கிப் பாராட்டி உள்ளார். இவர் ஆற்றியுள்ள சேவைக்காக பல ரோட்டரி, அரிமா விருதுகளைப் பெற்றுள்ளார்.

இவருடைய மனைவி டாக்டர் பானுமதி MBBS., DGO. இத்தம்பதியருக்கு இரு மகள்கள் உள்ளனர். மூத்த மகள் திருமதி தீபா தன் கணவர் திரு. இளங்கோ அவர்களுடன் திருப்பூரில் வசிக்கிறார். இளைய மகள் திருமதி பிரீத்தி அவர்களும் தன் கணவர் திரு. அருண்குமார் அவர்களுடன் திருப்பூரில் வசித்து வருகிறார்.

மனித நேயம் கொண்டு மருத்துவத்துறையிலும், தமிழ்ப்பற்று கொண்டு கலை, இலக்கியத்துறையிலும் சாதனைகள் பல புரிந்தவர். நாளும் தொண்டாற்றி வரும் நாவலர். இவருக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருதை வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## என்.கே.எம்.நல்லசாமி

கரூர் மாட்டம் சின்னவரப்பாளையம் – கடம்பங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த செங்கந்த குலம் திரு. மாரப்ப கவுண்டர் – திருமதி பாப்பாயி அம்மாள் ஆகியோருக்கு காங்கேய பல்லவராய மன்றாடியார் பரம்பரையில் 1957 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் திரு. என்.கே.எம்.நல்லசாமி.

பள்ளிப்படிப்பை நல்லூர் புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியிலும், B.Sc., பட்டப்படிப்பைத் திருச்சி தூய சூசையப்பர் கல்லூரியிலும் படித்து முடித்தார் பின்னர் தணிக்கையாளர் பட்டையத்திற்கான தேர்வுகளில் வெற்றி பெற்று FCA பட்டம் பெற்றார். தற்போது கரூரில் ஆடிட்டராகப் பணியாற்றி வருகிறார்.

சமுதாயப்பணி, விளையாட்டு நிகழ்ச்சிகள், சமூக சேவை ஆகியவற்றில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். கொங்கு சமுதாய வளர்ச்சிக்குப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் முன்னணித்தலைவர்களில் ஒருவராக இவர் விளங்குகிறார்.

தற்போது கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவையின் மாநிலத் தொண்டரணிச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்பாகப்பணியாற்றி வருகிறார். கொங்கினத்திற்குப் புத்துணர்ச்சியூட்டும் விதத்தில் சமீப காலத்தில் சங்ககிரி, திருச்செங்கோடு, நாமக்கல் போன்ற நகரங்களில் நடைபெற்ற பேரணிகள் மற்றும் பொதுக்கூட்டங்களின் பெரும் வெற்றிக்கு இவருடைய முக்கிய பங்களிப்பும் உண்டு. தமிழ்நாடு சதுரங்கக்கழகத்தின் மாநிலத் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகிறார். கரூர் மாவட்ட ஜீனியர் சேம்பர் ஆப் காமர்ஸ் அன்ட் இண்டஸ்ட்ரீஸ் மாவட்டத்தலைவராகவும், கரூர் மாவட்ட எறிபந்து கழகத்தலைவராகவும், கரூர் மாவட்ட சதுரங்கக் கழகத்தலைவராகவும், எஸ்.ஆர்.என்.அறக்கட்டளை தலைவராகவும், கரூர் ரைபிள் கிளப் மாவட்டச் செயலாளராகவும், கரூர் மாவட்ட கொங்கு வேளாளக்கவுண்டர்கள் தர்ம அறக்கட்டளையின்

நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பொறுப்புகளை ஏற்று திறம்படப் பணியாற்றி வருவதுடன், அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.

இதற்கு முன்னர், கரூர் மாவட்ட கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையின் தலைவராகவும், கரூர் கொங்கு நண்பர்கள் சங்கச் செயலாளராகவும், கரூர் மாவட்ட ஆடிட்டர் சங்கச் செயலாளராகவும் பொறுப்புகளை வகித்துள்ளார். வகித்த பொறுப்புகளிலெல்லாம் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு, எல்லாதரப்பு மக்களின் பாராட்டையும் பெற்றவர் இவர்.

தொடர்ந்து **35** ஆண்டுகளாக கொங்கு சமுதாயப்பணியில் ஈடுபட்டு, தன்னால் இயன்ற அளவுக்கு சமுதாயத்திற்கும், நலிந்தோர்க்கும் தொண்டு செய்து வருகிறார். கொங்குப் பேரவை நடத்திய அனைத்துப்போராட்டங்களிலும் கலந்துகொண்டு முக்கியப் பணியாற்றியுள்ளார். நமது சமுதாயத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்காக கோவையில் நடைபெற்ற மாநாட்டில் நமது சமுதாய மாணவர்களைக்கூட்டிச் சென்றதற்காக, திருச்சி தூய சூசையப்பர் கல்லூரி விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டவர் இவர். கரூரில் மூன்றாவது மாநில மாநாட்டை நடத்த வித்திட்ட பெருமை கொண்டவர் இவர். கரூர் மாவட்ட கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவைத்தலைவராக இவர் இருந்தபோது, அரவக்குறிச்சி மாநாடு மிகச்சிறப்பாக நடைபெற்றதற்கு முக்கியக்காரணமாக இருந்தவர், மாநாட்டுத்தலைவராக இருந்த திரு.என்.கே.எம். நல்லசாமி அவர்களே. கள்ளுக்கடை திறந்திடக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்தி அரசின் கவனத்தை ஈர்த்து பெரும்முயற்சி எடுத்தவர். இவருடைய சமுதாயப்பணிகளுக்குத் துணை நிற்பவர் இவர் மனைவி திருமதி சாந்தி. இவருக்கு மணிமலர் என்ற மகளும், வேல்முருகன் என்ற மகனும் உள்ளனர். மகள் மணிமலர் கரூர் வித்யா பவனில் பத்தாம் வகுப்பும், மகன் வேல்முருகன் புலியூர் ராஜா முத்தையா பள்ளியில் ஆறாம் வகுப்பும் படித்து வருகின்றனர்.

கொங்கு குலக்கோயில்கள் முன்னேற்ற சங்கம் துவக்கியதில் இவருக்கு முக்கியப் பங்குண்டு. எஸ்.ஆர்.என்.அறக்கட்டளை சார்பில் பல உதவிகளைச் செய்யவும், தொழில் முனைவோர் பயிற்சி அளித்திடவும் ஏற்பாடுகளைச் செய்து மனிதநேயப்பணிகளில் முன்னணியில் உள்ளவர். மாணவர்கள் விளையாட்டுகளில் ஈடுபட ஊக்குவிக்கும் பொருட்டு பல போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கியவர் இவர்.

கொங்கு சமுதாயப்பணியில் சாதனைகள் பல புரிந்துள்ள திரு. என்.கே.எம்.நல்லசாமி அவர்கட்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் ஜி.செங்கோட்டுவேலு

சேலத்தைச் சேர்ந்த திரு. எஸ்.குணசேகரன் – திருமதி கிருஷ்ணவேணி தம்பதியரின் மகனாக1969 ஆம் ஆண்டு பிறந்தவர் டாக்டர் ஜி.செங்கோட்டுவேலு அவர்கள்.

மருத்துவத் துறையில் சாதனைகள் பல புரிந்துள்ள இவர் பள்ளிப்படிப்பை சேலம் ஹோலி கிராஸ் பள்ளியிலும், MBBS பட்டப்படிப்பை சென்னை மருத்துவ கல்லூரியிலும், MD (General Medicine) பட்டப்படிப்பை மணிப்பால் கஸ்தூர்பா மருத்துவக் கல்லூரியிலும், DM (Cardiology) பட்டப்படிப்பை சென்னை இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியிலும் முடித்து, DNB (Cardiology) பட்டம் மற்றும் Fellowship in Interventional Cardiology (France), FSCAI (USA) ஆகிய உயரிய தகுதிகளையும் பெற்றுள்ளார்.

தற்போது ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரியில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். சென்னை அப்போலோ மருத்துவமனையில் Visiting Consultant ஆகவும் உள்ளார். ஏஞ்சியோபிளாஸ்டி இதய சிகிச்சையில் தலைசிறந்த மருத்துவராக விளங்கும் இவர் இதுவரை 750 பேருக்கு சிகிச்சை அளித்துள்ளார். தமிழகத்தின் தலைசிறந்த இருதய மருத்துவர்களில் ஒருவராக விளங்கும் சிறப்புப் பெற்றவர் இவர். 10 வருடங்களாக மருத்துவ மாணவர்களுக்கு ஆசிரியராகப் பணியாற்றிய சிறந்த அனுபவம் கொண்ட இவர், ஏஞ்சியோபிளாஸ்டி சிகிச்கைபற்றி வெளிமாநில மருத்துவர்களுக்கும், இளம் இதய மருத்துவர்களுக்கும் தக்க பயிற்சி அளித்துள்ளார்.

பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று, இந்தத் துறை மருத்துவத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சிறந்த நிபுணத்துவம் பெற்றுள்ளார். பல்வேறு மருத்துவ இதழ்களில் இவரது கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இந்திய அளவிலும் மற்றும் பன்னாட்டு அளவிலும் பல கருத்தரங்குகளில் கலந்துகொண்டு பல ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்து, பலரின் பாராட்டுகளைப் பெற்றவர் இவர். பல மருத்துவ மாநாடுகளிலும், பன்னாட்டு

கருத்தரங்குகளிலும் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு சிறப்புமிக்க பயனுள்ள உரைகள் பலவற்றை நிகழ்த்தி தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

மென்பொருள் பொறியாளர்களுக்காக பல விழிப்புணர்வு முகாம்களை நடத்தியுள்ளார். பல இதய முகாம்களை நடத்தி மக்களுக்கு இதயத்தைப்பேணிக்காத்திடும் வழிவகைகளைப் பற்றி எடுத்துரைத்துள்ளார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்களுக்காக சிறப்பு இருதய மருத்துவ முகாம் நடத்தி பல கொங்கு சொந்தங்களுக்குத் தக்க சிகிச்சைகள் அளித்து, அனைவரது பாராட்டையும் பெற்றவர் இவர்.


இவருடைய சாதனைகளுக்காக பல்வேறு விருதுகளைப்பெற்றுள்ளார். 2004 ஆம் ஆண்டு ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக்கழகத்தின் இருதயப்பிரிவு இவருக்கு சிறந்த சேவைக்கான விருதை வழங்கிக் கௌரவித்தது. அனைந்திந்திய பண்பாட்டு அகாடமி 2007 ஆம் ஆண்டு இவருக்கு பாரத் ரத்னா ராஜிவ் காந்தி விருதை வழங்கிச்சிறப்பித்தது. புதுடெல்லி மேக்ஸ் மருத்துவமனையில் நடந்த AMI கருத்தரங்கு வினாவிடை போட்டியில் வெற்றி பெற்றார். இந்த விருதுகளுக்கெல்லாம் முத்தாய்ப்பு வாய்த்ததாக, சமீபத்தில் AICT தாய்லாந்தில் இவருடைய சிறந்த ஏஞ்சியோ பிளாஸ்டி பற்றிய படைப்புக்காக முதற்பரிசும், ‘Young Interventionalist Award’ என்ற உயரிய ஆசிய விருதும் பெற்றுத் தமிழகத்திற்குப் பெரும் பெருமை சேர்ந்துள்ளார். 2006 ஆம் ஆண்டு இராமச்சந்திரா மருத்துவமனையில் 50 வயது நிரம்பிய இருதய நோயாளிக்கு இவர் அளித்த மிக நுண்ணிய, அற்புதமான ஏஞ்சியோபிளாஸ்டி சிகிச்சையே இவருக்கு இந்தியா, சைனா, தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து கலந்துகொண்ட மருத்துவர்களின் கடும்போட்டிக்கிடையே, மேற்கண்ட ஆசிய விருதைப்பெற்றுத்தந்தது.

இந்திய மருத்துவக்கழகம், இந்திய பொது மருத்துவர்கள் சங்கம், இந்திய இதய சங்கம், இருதய ஏஞ்சியோ கிராபி மற்றும் இருதய அறுவை சிகிச்சை சங்கம், இந்திய எகோகார்டியோ கிராபி அகாடமி போன்ற மிக உயர்ந்த மருத்துவ அமைப்புகளில் உறுப்பினராக உள்ள சிறப்பு பெற்றவர் இவர். இவருக்கு பூர்ணிமா என்ற மனைவியும், அஷ்வத் கிருஷ்ணா என்ற மகனும் உள்ளனர்.

மனித நேயம்,, சிறந்த மருத்துவச்சேவை, உலகளவில் ஏஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சையில் நிபுணத்துவம், சமுதாயச் சேவை ஆகியவற்றில் சிறந்து விளங்கி சாதனைகள் பல புரிந்திட்ட டாக்டர் ஜி.செங்கோட்டுவேலு அவர்களின் சிறந்த மருத்துவப்பணிக்காக சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் வி.முருகன்

தருமபுரி மாவட்டம் கூச்சனூர் கிராமத்தில் திரு.வெள்ளைய கவுண்டர் – திருமதி குப்பம்மாள் ஆகியோருக்கு **1950** ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் டாக்டர் வி. முருகன் அவர்கள். பள்ளிப்படிப்பை வேப்பம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியிலும், புகுமுக வகுப்பை திருப்பத்தூர் தூய இதயக்கல்லூரியிலும், B.Sc., பட்டப்படிப்பை தருமபுரி அரசு கலைக்கல்லூரியிலும், M.A., பட்டப்படிப்பை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், PGDTE மற்றும் PGCTE பட்டங்களை ஐதராபாத் CIEFL நிறுவனத்திலும், M.Phil., பட்டப்படிப்பை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும், Ph.D. பட்டத்திற்கான ஆய்வை சென்னைப்பல்கலைக்கழகத்திலும் முடித்தார். அதன்பிறகு சென்னைப்பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் D.Lit., பட்டம் பெற்றார். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கலை அறிவியல் கல்லூரிகளிலும் ஆங்கிலத்தில் D.Lit., பட்டம் பெற்ற ஒரே பேராசிரியர் இவர் மட்டுமே.

செங்கல்பட்டு அரசு கலைக்கல்லூரி, விருத்தாசலம் அரசு கலைக்கல்லூரி, குடியாத்தம் அரசு கலைக்கல்லூரி, நந்தனம் அரசு கலைக்கல்லூரி ஆகிய கல்லூரிகளில் பணியாற்றி விட்டு, தற்போது சென்னை மாநிலக்கல்லூரியில் ஆங்கிலத்துறைத் தலைவராக பணியாற்றி வருகிறார்.

இவருடைய சாதனைகள் வியக்கத்தக்கன. தமிழகத்தின் தலைசிறந்த ஆங்கில அறிஞர்களில் ஒருவரான இவர், ஒரு சிறந்த மொழி பெயர்ப்பாளர். சிறந்த மொழிபெயர்ப்புக்காக தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் “Best Translator” விருதை இரண்டு முறை பெற்றவர். தொல்காப்பியம், நற்றினை, கலித்தொகை, பாரதிதாசன் கவிதைகள், குலோத்துங்கன் கவிதைகள் உட்பட பன்னிரண்டு தமிழ்க்கவிதை, காப்பியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அனைவரின் பாராட்டையும் பெற்றவர். தமிழில் முதன்முதலாய் தமிழ்–தமிழ்–ஆங்கிலம் மின்னனு அகராதியை உருவாக்கியவர். Oxford

University Press நிறுவனத்திற்காக இவர் English - English - Tamil Dictionary தயாரித்துக் கொடுத்துள்ளார்.

15 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். திருக்குறளையும் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். இவருடைய அயரா உழைப்பில் தயாரான “Lexicographic Practice in Tamil - Problems and Prospects ஆசிய கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்டு சான்றோர் பலரால் பாராட்டப்பட்டது.

“Kongu Vellalar Marriage Rites’ மற்றும் Kongu Warrior Dheeran Chinnamalai என்ற இரண்டு ஆங்கில நூல்களுக்கு இவர் வழங்கியுள்ள சிறப்புமிக்க அணிந்துரைகள் கொங்கு வேளாளர் இன மக்களின் பெருஞ்சிறப்பையும், பண்பாட்டையும் விளக்குகின்றன. 25 க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும், கருத்தரங்குகளிலும், ஆய்விதழ்களிலும் வெளியிட்டுள்ளார். நான்கு இதழ்களுக்கு ஆசிரியராய்ப் பணிபுரிந்த சிறப்பு பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் -ஆங்கில அகராதி தயாரிப்பின் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர்.

இவரைப்பேட்டி கண்டு The Hindu, Indian Express, India Today போன்ற புகழ்பெற்ற ஆங்கில பத்திரிக்கைகள், இவருடைய மாபெரும் சாதனைகளை வியந்து போற்றி வெளியிட்டுள்ளன. கோவை பாரதியார் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ள தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய படைப்பிலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் குழுவின் உறுப்பினராகவும், ஆங்கில மொழி நுண்ணாய்வாளராகவும் பணியாற்றி வருகிறார். மூன்றுஆண்டுகளுக்கு UGC Post Doctoral Research Award பெற்ற சிறப்பு இவருக்குண்டு. நடுவன் அரசின் தமிழ்செம்மொழி ஆய்வு நிறுவனத்தின் ஆங்கில பதிப்பாசிரியராகவும் பணியாற்றி வருகிறார். தமிழகத்தின் தலைசிறந்த மொழிபெயர்ப்பாளராய் விளங்கும் இவர் எளிமை, அடக்கம், அயரா உழைப்பு, வியத்தகு திறமை போன்ற குணங்களுக்குச் சொந்தக்காரர். ஈடில்லா சாதனைகள் நிகழ்த்தியுள்ள இவர் மனைவி பெயர் தேன்மொழி. இத்தம்பதியருக்கு டாக்டர் பாரிமுருகன் என்ற மகனும், முல்லை என்ற மகளும் உள்ளனர். பொறியாளர் முல்லை தனது கணவர் பொறியாளர் விவேகானந்தனுடன் அமெரிக்காவில் பணிபுரிகின்றார்.

எளிய விவசாயக்குடும்பத்தில் சிற்றூரில் பிறந்து, தமிழ்வழியில் கல்வி கற்று, ஆங்கிலத்தில் அபாரத்திறமை கொண்டு பெரும் சாதனைகளை நிகழ்த்தியிருக்கும் டாக்டர் வி.முருகன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கி பாராட்டி மகிழ்கிறது.

❖❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## என்.எஸ். பெரியசாமி

நாமக்கல் மாவட்டம் நத்தமேடு என்ற குக்கிராமத்தில் **1964** ஆம் ஆண்டு திரு.பி.சாமிகவுண்டர் – திருமதி குப்பாயி ஆகியோரின் மகனாக, எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் திரு. என்.எஸ்.பெரியசாமி அவர்கள்.

பள்ளிப்படிப்பை புதுச்சத்திரம் அரசு உயர்நிலைப்பள்ளியிலும், கல்லூரி இளங்கலை பட்டப்படிப்பை நாமக்கல் அரசு கலைக்கல்லூரியிலும், சமூகவியல் முதுகலை பட்டப்படிப்பை (Social Work) கோவை, பெரிய நாய்க்கன் பாளையத்தில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா நிறுவனத்திலும், Town and Country Planning முதுகலை பட்டப்படிப்பை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திலும் படித்து முடித்தார். நகர்ப்புறங்களை நோக்கி மக்கள் குடிபெயரும் இக்காலக் கட்டத்தில், திரு. பெரியசாமி அவர்கள் கற்ற கல்வி மிக முக்கிய மானதாகவும், தனித்தன்மை கொண்டதாகவும், நகர்ப்புற அபிவிருத்தியில் பெரும் பங்காற்றுவதற்கான வாய்ப்பை அளிப்பதாகவும் அமைந்தது.

படிப்பை முடித்தவுடன் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில் (CMDA) Assistant Planner (உதவி திட்ட அமைப்பாளர்) பணியில் **1995** ஆம் ஆண்டு சேர்ந்தார். **2005** ஆம் ஆண்டு Deputy Planner (துணை திட்ட அமைப்பாளர்) ஆக பதவி உயர்வு பெற்றார்.

Institute of Town Planners, India, முக்கிய கொள்கை முடிவெடுக்கும். அதிகாரமுள்ள Indian Institute of Public Administration (இந்திய பொது நிர்வாக நிறுவனம்) போன்ற உயரிய நிறுவனங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார் இவர். IIPA சென்னைக் கிளையின் செயற்குழுவிற்கு தொடர்ந்து இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றிய பெருமை கொண்டவர் இவர்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக இரண்டு முறை மிகச்சிறப்பாகப் பணியாற்றி அனைவரின் பாராட்டையும் பெற்றவர் இவர். சென்னை இராயப்பேட்டையில் உள்ள வெள்ளிவிழா இல்லக் கட்டிடத்திற்கு நன்கொடை வசூலித்ததில் இவருக்குப் பெரும் பங்குண்டு. சமுதாய வளர்ச்சியிலும், கொங்கு சொந்தங்களுக்கு உதவுவதிலும் பெரும் ஆர்வமும், ஈடுபாடும் கொண்டவர். சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சிப்பணிகளில் பங்குகொண்டு அரும் பணியாற்றி உழைத்தவர்.

கோவை ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா, சென்னை இராமகிருஷ்ணா மிஷன் மாணவர் இல்லம், சென்னை வேளச்சேரி ரோட்டரி கிளப் தொடர்பான சேவைப்பணிகளில் பெரும் ஆர்வத்துடன் ஈடுபாடு கொண்டுள்ளார். இவர். தன்னால் இயன்ற உதவிகளை, நாடி வருவோர்க்கும், வாடி இருப்போர்க்கும் செய்வதில் அக்கறையும் மகிழ்ச்சியும் கொண்டு வாழ்ந்து வருபவர்.

தமிழகத்தில் கொங்கு வேளாளர் இன மக்கட்தொகையை ஒப்பிடும்போது கொங்கு சமுதாயத்தின் சார்பாக உயர் அரசுப்பணிகளில் உள்ளவர் தொகை மிகவும் குறைவே. கொங்கு சமுதாய மக்கள் உயர்கல்வி பெற வேண்டும் என்பதிலும், பெருமளவில் அரசுப்பணிகளில் சேர முயற்சி செய்யவேண்டும் என்று விழிப்புணர்ச்சியூட்டி, அதற்கான வழிவகைகளை எடுத்துக்கூறியும் கொங்கு சமுதாய வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருபவர், திரு. பெரியசாமி அவர்கள்.

இவருடைய மனைவி டாக்டர் ஏ.உமாமகேஸ்வரி சென்னை பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயோடெக்நாலஜி (Biotechnology) துறைத் தலைவராய்ப் பணியாற்றி வருகிறார். இத்தம்பதியருக்கு சி.பி.பராசர், சி.பி.சங்கர் ஆகிய இரண்டு மகன்கள் உள்ளனர்.

அரசுப்பணியிலும், சமுதாயப்பணியிலும் சாதனைகள் பல படைத்துள்ள திரு.என்.எஸ்.பெரியசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கி பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் சி.சுவாமிநாதன்

ஈரோடு மாவட்டம், திங்களூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏ.சின்னப்பக்கவுண்டர் – திருமதி பொன்னம்மாள் தம்பதியரின் மகனாக 1954 ஆம் ஆண்டு பிறந்தவர் டாக்டர் சி.சுவாமிநாதன் அவர்கள்.

பள்ளிப்படிப்பை திங்களூர் அரசு உயர்நிலைப்பள்ளியிலும், புகுமுக வகுப்பு மற்றும் B.A., பட்டப்படிப்பை ஈரோடு சிக்கய நாயக்கர் கல்லூரியிலும், M.A., பட்டப்படிப்பை சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும், M.Phil., பட்டப்படிப்பை சென்னைப் பல்கலைக்கழகத்திலும், Ph.D., ஆய்வை கோவை பாரதியார் பல்கலைக்கழகத்திலும் முடித்தார்.

கோவை CBM கல்லூரியில் 1980 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை விரிவுரையாளராகவும், 1994 ஆம் ஆண்டு முதல் 2008 மே மாதம் வரை ஈரோடு கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றினார். ஈரோடு கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழகத்தின் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்வதற்கு இவரே முக்கியக் காரணம், சீரிய தலைமைப்பண்பு, ஆழ்ந்த அனுபவம், ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்குவித்து சிறந்த கல்வியளிக்கும் திறமை, அயரா உழைப்பு போன்ற அருங்குணங்களைக்கொண்ட இவர் தற்போது ஈரோடு சூர்யா பொறியியல் கல்லூரி தாளாளராகவும், ஈரோடு பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலாளராகவும் பொறுப்பேற்று இந்த இரண்டு கல்லூரிகளின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வருகிறார்.

கோவை பாரதியார் பல்கலைக்கழக செனட் உறுப்பினராக 1994 ஆம் ஆண்டு முதல் இருந்து வருகிறார். 1999 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகள்

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக சிண்டிகேட் உறுப்பினராகப் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு. 25-07-1999 முதல் 24-07-2002 வரை பத்து கல்லூரிகளின் நிர்வாகக்குழுக்களில் பல்கலைக்கழகப் பிரதிநிதியாகப் பணிபுரிந்துள்ளார். தற்போது இரண்டு கல்லூரிகளில் பல்கலைக்கழகப் பிரதிநிதியாகப் பணியாற்றி வருகிறார்.

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் தர ஆலோசனைக்குழு உறுப்பினராகவும், தர உறுதி செய்யும் பிரிவின் உறுப்பினராகவும் பொறுப்பேற்றுள்ளார். புதிதாகத் தொடங்கப்படும் கல்லூரிகளுக்கும், பாடத்திட்டங்களுக்கும் பல்கலைக்கழக அனுமதியளிப்பதற்காகப் பார்வையிட வரும் ஆய்வுக்குழு கன்வீனராகவும் உள்ளார்.

கல்லூரியில் மாநில அளவிலும், இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் எண்ணற்ற கருத்தரங்குளை மிகச்சிறப்பாக நடத்தியுள்ளார். மத்திய, மாநில அமைச்சர்கள், சிறந்த தொழிலதிபர்கள், சிறந்த கல்வியாளர்கள் இக்கருத்தரங்குகளில் கலந்துகொண்டது இவருடைய சீரிய தலைமைக்கும், திறமைக்கும் சான்று பகர்வனவாக உள்ளது.

இவருடைய சீரிய வழிகாட்டுதலின் பேரில் இரண்டு மாணவர்கள் (Ph.D) டாக்டர் பட்டமும், ஒரு மாணவர் M.Phil., பட்டமும் பெற்று உள்ளார்கள். விரைவில் மேலும் ஐந்து மாணவர்கள் டாக்டர் பட்டமும், ஒரு மாணவர் M.Phil., பட்டமும் பெற உள்ளனர்.

பல கருத்தரங்குகளில் கலந்துகொண்டு, ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். பல தொழில் முறை அமைப்புகளில் உறுப்பினராக உள்ளார். சீனா உட்பட பல நாடுகளுக்கு கல்வியாளராகப் பயணம் மேற்கொண்டார்.

இவருடைய மனைவி திருமதி ரஞ்சிதம் ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். கல்வியில் சிறந்து விளங்கும் இத்தம்பதியரின் மகள் செல்வி எஸ்.திவ்யா B.E., பட்டப்படிப்பை முடித்துவிட்டு, தற்போது மென்பொருள் பொறியாளராய்ப் பணியாற்றி வருகிறார்.

கல்விப்பணியில் மிகச்சிறந்து விளங்கி, கொங்கு நாட்டில் எண்ணற்ற சிறந்த மாணவர்களை உருவாக்கி சாதனை படைத்த கல்வியாளர் டாக்டர் சி.சுவாமிநாதன் அவர்கட்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கி மகிழ்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## சி. கந்தசாமி

சேலம் மாவட்டம், சங்ககிரி திரு. செல்லப்ப கவுண்டர் – திருமதி சின்னம்மாள் தம்பதியருக்கு மகனாக 1948 ஆம் ஆண்டில் பிறந்தவர் திரு. சி.கந்தசாமி அவர்கள்

பள்ளிப்படிப்பை சங்ககிரி அரசுப்பள்ளியிலும், பி.எஸ்.சி (கணிதம்) பட்டப்படிப்பை திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியிலும் முடித்தார். 1970 ஆம் ஆண்டு தருமபுரி அரசு மருத்துவமனையில் அரசு வேலையில் சேர்ந்தார். பிறகு 1978 ஆம் ஆண்டு பேருந்து தொழிலில் நுழைந்தார். 6 பயணியர் பேருந்துகள் மற்றும் 6 சுற்றுலா பேருந்துகள் இவருடைய நிறுவனத்தில் ஒரு கட்டத்தில் இருந்தன.

கடந்த 25 ஆண்டுகளாக தருமபுரி மாவட்ட பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பொருளாளராகவும், தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். மேலும் LPG டேங்கர் லாரிகள், செந்தில் எர்த்மூவர்ஸ் என்ற பெயரில் 10 டிப்பர் டாரஸ் வண்டிகளும், எஸ்கவேட்டர் இயந்திரங்களும் தற்போது இவருடைய நிறுவனத்தில் இயங்கி வருகின்றன. தருமபுரி மாவட்டத்திலேயே முதன்முதலாக ரிசர்வ் வங்கி அனுமதியுடன் செந்தில்நாதன் பைனான்சியர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தையும், செந்தில் நாதன் சிட்ஸ் பிரைவேட் லிமிடெட் எனற நிறுவனத்தையும் நடத்தி வருகிறார்.

1990 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீ கார்த்திகேயா மற்றும் செந்தில் பார்மா ஏஜென்சீஸ் என்ற பெயரில் மொத்த மருந்து வியாபாரத்தை, தருமபுரி, சேலம் மற்றும் ஓசூரில் செய்து வருகிறார். பிரபலமான சுமார் 100 கம்பெனிகளின் ஸ்டாக்கிஸ்டாக இருந்து தமிழகத்தின் 10 மாவட்டங்களுக்கு மருந்து வினியோகித்து வருகிறார். தமிழகத்தின் மிகச்சிறந்த 10 மருந்து

வியாபார கம்பெனிகளில் இவருடைய நிறுவனமும் ஒன்று. தமிழ்நாடு மொத்த மருந்து வணிகர்கள் சங்கத்திலும் முக்கியப் பொறுப்பு வகித்து வருகிறார்.

1995 ஆம் ஆண்டிலிருந்து தருமபுரியில் 15000 ஸ்பின்டில் கொண்ட செந்தில்நாதன் நூற்பாலையைத் துவக்கி, நல்ல முறையில் நடத்தி வருகிறார். கயத்தாரில் 1250 கி.வா.அளவில் ஒரு காற்றாலையை நிறுவி, மின் உற்பத்தி (Wind Power) செய்து வருகிறார்.

2002 ஆம் ஆண்டு தருமபுரியின் மையப்பகுதியில் செந்தில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைத் துவங்கி, தற்போது இந்தக்கல்விநிறுவனத்தில் 2500 மாணவர்கள் படித்து வருகின்ற அளவுக்கு கல்விப்பணியைச் சிறப்பாக ஆற்றி வருகிறார். நவீன வசதிகளுடன் சிறப்பான, தரமான கல்வியையளித்துக்கொண்டிருக்கும் இப்பள்ளி மாநில, மாவட்ட அளவில் பல சாதனைகளையும் படைத்துள்ளது. இவரது நிறுவனங்களில் சுமார் 750 பேர்களுக்கு மேல் நேரடியாகப் பணிபுரிந்து வருகின்றனர். ஏழை மாணவர்கட்கும், முன்னாள் இராணுவ வீரர்களின் குழந்தைகட்கும் சலுகைகளும், உதவியும் அளித்து வருகிறார். கொங்கு சமுதாய வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகிறார்.

இவருடைய மனைவி திருமதி மணிமேகலை அனைத்துத் தொழில்களிலும் மிக்க உறுதுணையாக இருந்து வருகிறார். மகள் திருமதி கே.பிரேமலதா B.Sc,. இவருடைய கணவர் திரு. ஆர்.கார்த்திகேயன், பி.இ. சேலத்தில் உள்ள திரிவேணி எர்த்மூவர்ஸ் என்ற நிறுவனத்தில் செயல் இயக்குநராகப்பணிபுரிந்து வருகிறார். திரு. கந்தசாமி அவர்களின் மகன் திரு.கே. தனசேகர் பி.இ. தற்போது செந்தில்நாதன் ஸ்பிள்ளிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலையை சிறப்பான முறையில் நடத்தி வருகிறார். கே.தனசேகர் அவர்களின் மனைவி திருமதி டி.தீப்தி பி.இ. கணவருக்கு உறுதுணையாக உள்ளார்.

ஈடுபட்டுள்ள தொழில்கள் அனைத்திலும் சிறந்து விளங்கி, பின்தங்கிய தருமபுரி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்து வருபவர் இவர். தொழிலிலும், கல்விப்பணியிலும், சமுதாயப்பணியிலும் சிறந்து விளங்கி சாதனைகள் பல புரிந்துள்ள திரு. சி.கந்தசாமி அவர்கட்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## கொங்கு கோவிந்தசாமி

ஈரோடு மாவட்டம் காங்கயம் வட்டம் கீரனூர் கிராமம் பூமாண்டன் வலசில் திரு. பழனிசாமிக்கவுண்டர் – திருமதி சுப்பம்மாள் தம்பதியரின் மகனாக 1947 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு. கொங்கு கோவிந்தசாமி அவர்கள்.

பள்ளிப்படிப்பை சென்னிமலை குமரப்பா செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியிலும், டி.எம்.இ. பொறியியல் படிப்பை பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியிலும் படித்தார்.

கொங்கு கோவிந்தசாமி 1975 முதல் 1980 வரை சூலூர் முத்துகவுண்டன் புதூர் விவசாய பொறியியல் கூட்டுறவு சேவை மையத்தின் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றியுள்ளார். இங்கு டிராக்டர், கம்ப்ரசர் போன்ற இயந்திரங்களை விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் வாடகைக்கு விட ஏற்பாடு செய்தார்.இந்த நிலையத்தில் பூச்சி மருந்துகளும் குறைந்த விலைக்குத் தரப்பட்டன.

சூலூர் கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவையில் 1992 முதல் இன்று வரை தலைவராகப்பொறுப்பேற்று, சிறப்பாக சமுதாயப்பணிகள் பல புரிந்து சாதனை படைத்துள்ளார். 1992 முதல் சூலூர் கொங்கு வேளாளர் அறக்கட்டளையின் தலைவராகவும் பொறுப்பு வகித்து வருகிறார். இந்த அறக்கட்டளை மூலம் 50 லட்சம்ரூபாய் மதிப்புள்ள கொங்கு மகால் கட்டி முடித்து சாதனை படைத்தார். கொங்கு பள்ளி ஒன்றும் நல்லமுறையில் நடத்தப்பட்டு வருகிறது. இந்த அறக்கட்டளை மூலம் ஒவ்வொரு வருடமும் சூலூர் ஒன்றியத்தில் 15 அரசுப்பள்ளிகளிலிருந்து பத்தாம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 75 கொங்கு மாணவ, மாணவிகளுக்கு பரிசுத்தொகையும் தீரன்சின்னமலை பெயரில் கேடயமும் வழங்கப்படுகின்றன.

15–06–2006 முதல் கொங்கு அறக்கட்டளையின் மூலம் திருமணத்தகவல் மையம் துவங்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த இரண்டு வருடத்தில் மட்டும் 3000

பேர் இதில் பதிவு செய்துள்ளனர் இதுவரை இரண்டு சூலூர் கொங்கு சுயவரன் நடத்தி நிறைய திருமணங்கள் நிச்சயிக்க வழிவகை செய்துள்ளார். இந்த வருடம் நடந்த சுயம்வரன் நிகழ்ச்சியில் 596 பேர் கலந்துகொண்டனர் என்பது ஒரு சாதனையாகும்.

1992 ல் அமரர் கோவை செழியன் தலைமையில் கோவை மாவட்டத் தொண்டர் படை தலைவராகப் பணியாற்றியுள்ளார். கொங்கு பேரவையின் மாநிலப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். 2003 ஆம் ஆண்டு நமது இனத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனமாக அறிவிக்க வேண்டும் என்று மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தில் (State Backward Commission) தேவையான ஆதாரங்களைக் கொடுத்து இவர் வாதாடியுள்ளது இவரது சமுதாயக் சேவைக்குச் சிறந்த சான்றாகத்திகழ்கிறது. 1985–ஆம் ஆண்டு அம்பாசங்கர் அறிக்கையில் கொங்கு வேளாளக்கவுண்டர்களின் மக்கள் தொகை 23.69 லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றும், உண்மையான மக்கள் தொகை 129 லட்சம் என்றும் ஆதாரபூர்வமாக இவர் வாதிட்டது அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றது.

ஒன்றுபட்ட பேரவையின் மாநிலத் துணைப்பொதுச்செயலாளராகவும், மாநிலப் பொருளாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார். தீரன் சின்னமலை கவுண்டர் வரலாற்றை நூலாகவெளியிட்டுள்ளார், தற்போது கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையின் மாநில இணைப் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகிறார்.

சூலூர் லைன்ஸ் கிளப்பின் தலைவராகவும், மாவட்டத் தலைவராகவும் பொறுப்பேற்று பல சமூக சேவைகளைச் செய்து முடித்துள்ளார்.

இவருடைய சமுதாயச் சேவைகளுக்குத் துணை நிற்பவர் இவருடைய மனைவி திருமதி ஜி.பொன்மணி. இத்தம்பதியருக்கு ஜி.சக்தி, ஜி.சந்தியா என இரண்டு மகள்கள் உள்ளனர். மகள் ஜி.சக்தி பி.இ. திருமணமாகி அமெரிக்காவில் கணவர் எம்.பூபேஷ் ராஜா பி.இ.அவர்களுடன் வசித்து வருகிறார். இளைய மகள் ஜி.சந்தியா பிஇ., டி.சி.எஸ். நிறுவனத்தில் மென்பொருள் பொறியாளராகப் பணியாற்றுகிறார்.

சமுதாயச் சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, கொங்கு சமுதாய வளர்ச்சிக்கு அயராது உழைத்து சாதனைகள் பல புரிந்துள்ள திரு. கொங்கு கோவிந்தசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## ஆர். கோபாலகிருஷ்ணன்

பொள்ளாச்சி வருகம்பாளயத்தைப் பூர்வீகமாகக்கொண்ட வெண்டுவன் குல திரு. இராமச்சந்திர கவுண்டர் – திருமதி மீனாட்சி அம்மாள் ஆகியோரின் மகனாகப்பிறந்தவர் **51**வயது நிறைந்த திரு. ஆர். கோபாலகிருஷ்ணன் ஆவார். இவர் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டத்திலுள்ள பிளாச்சி மடை என்னும் கிராமமாகும்.

நடுத்தர விவசாயக் குடும்பத்தில் குக்கிராமத்தில் பிறந்த இவர் மிகவும் சிரமப்பட்டு, கேரள மாநிலத்தில் கல்வியிலும் சமுதாய அடிப்படையிலும் மிகவும் முன்னேற்றம் அடைந்த சமுதாயங்களுடன் போட்டியிட்டு, தகுதியின் அடிப்படையில் கல்லூரியில் பி.காம் பட்டப்படிப்பை முடித்து, தகுதியின் அடிப்படையில் Kerala Gazetted Service ல் தற்போது Divisional Accounts Officer ஆகக் கேரளப்பொதுப்பணித் துறையில் பணிபுரிந்து வருகின்றார்.

கேரள மாநிலத்தில் கொங்கு வேளாளர் சமூகம் முற்படுத்தப்பட்ட பிரிவில் உள்ளது. அரசின் எந்தவித சலுகைகளும் கிடைக்காத காரணத்தினால் கல்வி, வேலை வாய்ப்பு போன்ற துறைகளில் பெரும்பாலான கொங்கு வேளாளர் இளைஞர்கள் பாதிக்கப்பட்டதை உணர்ந்த இவர், ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட கொங்கு இன மக்கள் வாழும் கேரள மாநிலத்தில் சுமார் முப்பத்திற்கும் குறைவாகவே நம்மின மக்கள் அரசு வேலைகளில் உள்ளனர் என்பதைக்கண்டறிந்து மனம் வேதனையுற்றார்.

உடல் உழைப்பைத் தவிர வேறொன்றும் அறியாத கொங்கின மக்களை, மற்ற இன மக்கள் ஒதுக்கீடு அடிப்படையில் பல உயர் பதவிகளைப்பெற்று ஆண்டாண்டு காலமாக அடக்கி ஆண்டு வருகின்ற இழிநிலையை ஓர் அரசு அதிகாரி என்ற முறையில் நேரடியாகவே உணர்ந்த இவர், இந்த இழிநிலைமையிலிருந்து நம்மின மக்களைக்காப்பாற்றிடவும், கேரளவாழ் கொங்கின மக்களுக்குக் கல்வியிலும் அரசு வேலை வாய்ப்பிலும் உரிய

பிரதிநிதித்துவம் மற்றும் மாநில, மத்திய அரசின் சலுகைகள் கிடைக்கப்பெறவும், ஒரு வலுவான இயக்கம் கேரளாவில் தேவை என்று முடிவு செய்து, 24–10–2006 அன்று கொழிஞ்சாம்பாறையில், 'கேரள மாநில கொங்கு வேளாளர் சங்கம்' என்ற சமுதாயத்தொண்டு இயக்கத்தை நண்பர்கள் துணைகொண்டு துவக்கினார். இச்சங்கம் கேரள அரசிடம் 24–12–2006 அன்று முறைப்படி பதிவு செய்யப்பட்டு இன்றுவரை இவரது தலைமையின் கீழ் கொங்கு மக்களுக்கு மிகச் சிறப்பாக சேவை செய்து வருகிறது.

கேரள மாநிலத்தில் கொங்கு வேளாளர் சமூகத்தைத் பின்தங்கியோர் பிரிவில் (OBC) சேர்க்க, சங்கத்தின் மூலம் பல்வேறு முயற்சிகளை இவர் எடுத்து வருகிறார். இப்போது இந்தக்கோரிக்கை அரசின் பின்தங்கியோர் கமிஷனின் பரிசீலனையில் உள்ளது இவரின் முயற்சிக்குக் கிடைத்துள்ள முதல் வெற்றியாகும். சங்கத்தின் சார்பில் தீரன்சின்னமலையின் பிறந்த நாள் மற்றும் நினைவுநாள் ஆகியவற்றை கேரள மாநிலத்தில் சிறப்பாகக் கொண்டாடி வருவதில் இவருடைய பங்கு மகத்தானது. இவருடைய சீரிய தலைமையின் கீழ் இயங்கி வரும் சங்கம் பாலக்காடு மாவட்டத்தில் 40க்கும் மேற்பட்ட கிளைகளை நிறுவி சமுதாயத் தொண்டாற்றி வருகிறது. கேரள வாழ் கொங்கின மக்களுக்குச் சேவை செய்வதற்காக இச்சங்கத்தின் தலைமையில் கொங்கு திருமண தகவல் மையம் வண்ணாமடையில் செயல்பட்டு வருகிறது. கொங்கு மாணவர்கட்கு உயர்கல்வி அளிக்க சங்கத்தின் சார்பில் Medical College, Engineering College முதலியவை தொடங்க இவர் பெருமுயற்சி எடுத்து வருகிறார்.

27–12–2007 அன்று கொழிஞ்சாம்பாறையில் பல்லாயிரக்கணக்கான கொங்கின மக்கள் பங்கேற்ற சங்கத்தின் முதலாம் மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்து சாதனை படைத்தவர் இவர். கேரள கொங்கின மக்களுக்காக குரல் கொடுத்த இந்த மாநில மாநாட்டில் கேரள மற்றும் தமிழகத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இவரது மனைவி பெயர் கிருஷ்ணவேணி. இவரது மகன் செல்வன் அருண்குமார் முதலாம் ஆண்டு விவசாயப் பட்டப்படிப்பு படித்து வருகிறார்.

கேரள மாநில கொங்கின மக்களுக்காக சங்கம் அமைத்து, மிகச்சிறப்பான முறையில் சமுதாயப் பணியாற்றிவரும் திரு. ஆர். கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்குவதில் பெருமை கொள்கிறது.

❖❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திருமதி டி.எம்.தங்கமணி

பொதுத் தொண்டாற்றுவதற்கும், சமூக சேவைக்கும் பணம், பதவி, படிப்பு போன்றவை அவசியம் தேவை என்று யாரும் கருதினால் அதைத் தவறு என்று நிரூபித்து வருகிறார் ஊத்துக்குளி, காங்கேயம் பாளையம் செங்கப்பள்ளியில் பிறந்து வளர்ந்த திருமதி டி.எம்.தங்கமணி அவர்கள். இவை யாவும் இல்லாமல் நல்ல மனம், உதவி செய்யும் எண்ணம், நியாயத்திற்காகப்போராடும் குணம் போன்றவை இருந்தாலே போதுமென்று வாழ்ந்து காட்டி வருகிறார், ஏழை விவசாயக்குடும்பத்தைச்சேர்ந்த இவர். இவர் படித்தது ஏழாவது மட்டுமே. தாயார் இறந்ததால் படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று.

44 வயது நிறைந்த இவருடைய தந்தை பெயர் திரு. முத்துசாமி கவுண்டர். தாயார் பெயர் திருமதி தனலட்சுமி. இவருடைய கணவர் திரு. தங்கமுத்து விஜயமங்கலம் அருகில் உள்ள கம்புளியம்பட்டி கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறார். இத்தம்பதியருக்கு தனலட்சுமி என்ற மகள் உள்ளார். இவர் பி.காம். பட்டப்படிப்பு முடித்து, தற்போது ஈரோடு கொங்கு கலைக்கல்லூரியில் MBA பட்டத்திற்காகப் படித்து வருகிறார்.

திருமதி தங்கமணி மகளிர் பஞ்சாயத்து கூட்டமைப்புச் செயலாளர், வட்டாரக்குழு உறுப்பினர், மாவட்ட கூட்டமைப்புப்பொருளாளர் போன்ற பொறுப்புகளை வகித்து வருகிறார். சுயமாகவும் மகளிர் குழு மூலமாகவும் இவர் ஆற்றிய சேவைகளில் சிலவற்றைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

- ❖ சுமதி என்ற பெண்ணுக்கு கால் உடைந்ததற்கு மருத்துவ உதவி செய்தார்.
- ❖ மகேஷ்வரி என்ற பெண்ணுக்கு தவறான சிகிச்சையால் குடல் இறக்கம் ஏற்பட்டது. அவரை கோவை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சரியான சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்.
- ❖ பூங்கொடி என்ற பெண்ணிற்குத் திருமணச் செலவிற்குப் பண உதவி செய்துள்ளார்.

- ❖ பள்ளக்காட்டூரில் உடல் ஊனமுற்ற ஒருவருக்கு மாவட்ட ஆட்சியர் மூலம் உதவித்தொகைக்கு ஏற்பாடு செய்தார்.
- ❖ சந்தோஷ் என்ற சிறுவனுக்கு இதய அறுவை சிகிச்சை செய்ய நிதி உதவி செய்தார்.
- ❖ பல்லகவுண்டன் பாளையம் கூனம்பட்டி புதூர் அனாதை இல்லத்திற்கு பல உதவிகள் செய்து வருகிறார். சேமூரிலிருந்து மூன்று அனாதைக் குழந்தைகளை இந்த இல்லத்தில் சேர்த்துள்ளார்.
- ❖ சரளை பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகள் நின்று செல்ல மகளிர் குழு மூலம் போராட்டம் நடத்தி வெற்றி கண்டுள்ளார்.
- ❖ கம்புளியம்பட்டியில் மத்திய தொழிலாளர் நல வாரியம் மூலம் மக்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார்.
- ❖ சுகுணா என்ற பெண்ணை அரவிந்த் கண் மருத்துவமனையில் கண் மருத்துவப்படிப்பு படிக்க வைத்துள்ளார்.
- ❖ பேபி என்ற பெண்ணிற்கு உள்ளூரில் சுய வணிகம் செய்ய ஏற்பாடு செய்துள்ளார்.
- ❖ நாகப்பகவுண்டன்பாளையத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட 13 குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வாங்கிக்கொடுத்து உதவி செய்துள்ளார்.
- ❖ விவசாய நிலங்களை சிப்காட் கையகப்படுத்துவதை எதிர்த்து மகளிர் கூட்டமைப்பின் மூலம் 200 பெண்களுடன் போராட்டம் நடத்தியுள்ளார்.
- ❖ விவசாயிகளால் பராமரிக்கப்பட்டு வரும் கால்நடைகளுக்கு Insurance திட்டம் இருப்பதை எடுத்துரைத்து, காப்பீட்டுத்திட்டத்தில் விவசாயிகளைச் சேரச்செய்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு காப்பீட்டுத் தொகை கொடுக்க ஏற்பாடு செய்தார்.
- ❖ வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு மகளிர் சுய உதவிக்குழுக்களை அமைக்கச்செய்து அதன் மூலம் கடனுதவி பெறச்செய்தார்.

திருமதி தங்கமணியின் சேவைப்பட்டியலும், சாதனைகளும் தொடர்ந்து கொண்டே உள்ளன. இவர் கொங்கு நாட்டுப்பண்பாட்டிற்குச் சிறந்த உதாரணமாகத்திகழ்கிறார். எளிமை, உழைப்பு, உரிமைகளுக்குப் போராடுதல் போன்ற குணங்களைக்கொண்ட இவருடைய சிறந்த சமுதாயப்பணியைப் பெரிதும் பாராட்டி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருதை இவருக்கு வழங்கி மகிழ்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## பி.கோவிந்தசாமி

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம் சென்னிமலை அருகில் கந்தப்ப கவுண்டர் வலசு கிராமத்தில் திரு. பொன்னப்ப கவுண்டர் – திருமதி நாச்சம்மாள் ஆகியோரின் மகனாக விவசாயக்குடும்பத்தில் **1946** ஆம் ஆண்டு பிறந்தார், திரு. பி.கோவிந்தசாமி அவர்கள்.

தூரன் கூட்டத்தைச்சேர்ந்த இவர் பள்ளிப்படிப்பை சென்னிமலை செங்குந்தர் மேல்நிலைப்பள்ளியிலும், புகுமுக வகுப்பை காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும், பி.இ. (இயந்திரவியல்) படிப்பை ஆந்திர மாநிலத்தில் உள்ள வாரங்கள் மண்டல பொறியியற் கல்லூரியிலும், வெல்டிங்–ல் முதுநிலை பட்டயப்படிப்பை திருச்சி NIT யிலும் படித்து முடித்தார். FIE, MIWS, MISNT ஆகிய நிறுவன உறுப்பினராகவும் உள்ளார்.

திருச்சி, பாரத மிகுமின் தொழிலகத்தில் (BHEL) **1970** ஆம் ஆண்டு உற்பத்திப் பொறியாளராகப்பணியில் சேர்ந்தார். Senior Production Engineer / Boiler Production, Deputy Manager / SSTP, Manager / Commercial / SSTP, Senior Manager / Quality / SSTP, DGM / Quality எனப் படிப்படியாக பதவி உயர்வுகள் பெற்று General Manager / Quality (பொது மேலாளர் / தரம்) என்ற உயர்ந்த பதவி வகித்து **2006** ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார். அலுவல் நிமித்தமாகவும், குடும்பப் பயணமாகவும் பல நாடுகளுக்கும் சென்று வந்தவர் இவர்.

திருச்சி கைலாசபுரத்தில் உள்ள ஆர்எஸ்.கே மேல்நிலைப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் முதல் தலைவராக இருந்து, முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. அப்துல்கலாம் அவர்களைப்பள்ளி விழாவிற்கு அழைத்து அனைவரின் பாராட்டையும் பெற்றவர்.

BHEL Employees Co-operative Bank ன் தலைவராக இருந்து புதிய கட்டிடம் மற்றும்

ஏடிஎம் வசதியை தமிழக கூட்டுறவுத்துறைச்செயலாளர் அவர்களை வரவழைத்து திறப்பு விழா நடத்தி பலரது பாராட்டையும் பெற்றவர். கூட்டுறவுத்துறை அமைச்சரிடமிருந்து தமிழகத்தின் சிறந்த வங்கி என்ற பாராட்டைப்பெற்றதில் தலைவர் என்ற முறையில் காரணமாக இருந்தவர்.

திருச்சி கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முதல் செயலாளராக 1974 ல் சங்கத்தை ஆரமபித்தவர்களில் ஒருவர். மத்திய அரசு நிறுவனத்தில் வேலையிலிருந்தும் மிகத்துணிச்சலுடன் சமுதாயப்பணியாற்றும் உறுதியுடன் கொங்கு நண்பர்கள் சங்க செயலாளராகப்பொறுப்பேற்றுச்செயலாற்றியவர். சங்கப்பணிகளில் ஈடுபாட்டுடன் செயல்பட்டு, சங்கம் மிக வேகமாகவும் பரந்ததாகவும் வளரக்காரணமாயிருந்தவர். கொங்கு மாமணி திரு. ஆர்.தேவராஜன் அவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் திருச்சியில் ஆண்டுவிழாவை சிறப்பாக நடத்தி சிறந்த மாணவர்களுக்கு ஊக்கத்தொகையளித்தும், கொங்குச்சான்றோர்களை அழைத்து கௌரவப்படுத்தியும் சாதனை புரிந்தவர்.

திருச்சியில் கொங்கு மாணவர்கள் சங்கம், கொங்கு இளைஞர் அணி அமைப்பதில் முக்கியப் பங்காற்றியவர். திருச்சியில் ஒரே விழாவில் திரு. நல்ல சேனாதிபதி சர்க்கரை மன்றாடியார், அருட்செல்வர் கொங்கு மாமேதை நா.மகாலிங்கம், திரு. கோவை செழியன் ஆகிய மூவரையும் அழைத்துப்பேசச் செய்ததன் மூலம் சிறந்த ஒருங்கிணைப்பாளர் என்ற பாராட்டைப்பெற்றவர். கொங்கு பேரவை மாநாடுகளில் Master of Ceremony ஆகச் செயல்பட்டவர். கோவை செழியன் அவர்களால் பேரவையின் தூண்களில் ஒருவர் எனப்பாராட்டு பெற்றவர். திருச்சி கொங்கு நண்பர்கள் அனைவருக்கும் பல வழிகளிலும் உதவி செய்து வழிநடத்திச் செல்லும் மனித நேய மிக்க மனிதர்.

இவருடைய மனைவி பெயர் திருமதி யுவராணி. இத்தம்பதியருக்கு கோ.அருள்செல்வன் பி.இ. என்ற மகனும், டாக்டர் கவிதா MD (AM)., M.Phil., (SW) என்ற மகளும் உள்ளனர். மகன், சென்னை டிசிஎஸ்–ல் பொறியாளராகப்பணியாற்றுகிறார். மருமகன் திரு. ராஜகுமார் B.A., M.L., திருச்சி, கருமண்டபத்தில் வசிக்கிறார்.

BHEL நிறுவனத்தில் உயரிய பதவியில் சிறப்பாகப் பணியாற்றி, சமுதாயப்பணிகளில் சாதனைகள் பல புரிந்துள்ள திரு. பி.கோவிந்தசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் ஏ.செல்வி

சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி – கூடலூர் கிராமத்தில் பிறந்து, நெய்வேலி, பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் பணிபுரிந்த திரு. அத்தியப்ப கவுண்டர் – திருமதி ஜெயா ஆகியோரின் மகளாக 1967 ஆம் ஆண்டு பிறந்தவர் டாக்டர் ஏ.செல்வி அவர்கள்.

தொடக்கக்கல்வியை நெய்வேலியிலும், உயர்நிலைப்பள்ளிப்படிப்பை சேலம் தூய சூசையப்பர் பள்ளியிலும், B.Sc., (Agri), M.Sc., (Agri) மற்றும் Ph.D., பட்டப்படிப்புகளை கோவை வேளாண் பல்கலைக்கழகத்திலும் முடித்தார்.

1994 ஆம் ஆண்டு கோவையில் உள்ள கரும்பு இனப்பெருக்க நிலையத்தில் (Sugar Cane Breeding Institute) வேளாண் உயிர் தொழில் நுட்ப (Agricultural Bio-Tech) விஞ்ஞானியாகப் பணியில் சேர்ந்து தற்போது பதவி உயர்வு பெற்று Senior Scientist ஆகப் பணியாற்றி வருகிறார்.

நெல், கேழ்வரகு, பாசிப்பயிறு மற்றும் உழுந்து போன்ற தானியப்பயிர்களில் திசு வளர்ச்சி செய்து, அப்பயிர்களின் பாகங்களைக்கொண்டு பரிசோதனைக்கூடங்களில் முழு தாவரங்களை உருவாக்கியுள்ளார். பின்னர் நெற்பயிரில் காணப்படும் தண்டுப்புழுக்களை எதிர்க்கும் மரபணுக்களைக்கண்டறியும் ஆராய்ச்சியை மேற்கொண்டார். Rockfeller Foundation உதவியுடன் நடத்தப்பட்ட இந்த ஆராய்ச்சியின் மூலம் தண்டுப்புழு தாக்குதலை எதிர்க்கும் மரபணுக்களைக்கண்டறிந்து, அவற்றைக் கொண்டு அந்நோய் தாக்காத இரகங்களை உருவாக்கும் முறை கண்டறியப்பட்டது.

கரும்பு இனப்பெருக்க நிலையத்தில் மரபணு பற்றிய ஆராய்ச்சிகளை இவர் மேற்கொண்டுள்ளார். இதன் மூலம் இனப்பெருக்கத்திற்கு உகந்த தாய்க் கரும்புகளைக் கண்டறிவது. சிகப்பு அழுகல் நோய், தண்டுப்புழுத்தாக்குதல் ஆகியவற்றை எதிர்க்கும்

மரபணுக்களைக் கண்டறிவது முதலின சாத்தியமாகும். இந்தியா முழுவதும் பயிரிடப்பட்டு வரும் பலவகை கரும்பு இனங்களின் மரபணுக்களை ஆராய்ந்து, சிறந்த ஒட்டுரக மற்றும் உயர்ரக கரும்பு இனங்களை உருவாக்கும் வழிமுறை கண்டறியப்பட்டது.

விதைக்கரும்புகளின் தரத்தை, தாய்க்கரும்பைப்போலவே உள்ளதா என்று பரிசோதித்துச் சான்றளிக்கும் உரிமையை மத்திய அரசின் BCIL நிறுவனம் இவருக்கு வழங்கியுள்ளது.

இவருடைய கண்டுப்பிடிப்புகளைக்கௌரவிக்கும் வகையிலும், மேற்கொண்டு ஆராய்ச்சிகள் புரிந்திடவும், 2002 ஆம் ஆண்டு ஒரு வருடமும், 2007 ஆம் ஆண்டு ஒரு வருடமும் பிரான்ஸ் நாட்டு வேளாண்துறை ஆராய்ச்சி மையத்திற்கு (CIRAD) அனுப்பி வைக்கப்பட்டார். இது இவருக்குக் கிடைத்த தனிச்சிறப்பும், பெருமையுமாகும்.

பல பல்கலைக்கழக மாணவர்களுக்கு இவர் பயிற்சி அளித்து வருகிறார். ஆராய்ச்சிப் பணிகளுக்கு தக்க ஆலோசனையும் வழங்கி வருகிறார். நாட்டின் பல கல்லூரிகளில் இவரை அழைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றச் செய்துள்ளனர். இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் பல கருத்தரங்குகளில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றியும், ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தும் பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

சில இதழ்களின் பதிப்பாசிரியராகவும், பல தொழில்முறை அமைப்புகளில் உறுப்பினராகவும் உள்ளார். எந்தத்துறையில் ஈடுபட்டிருந்தாலும், அந்தத் துறையில் ஒரு சிறப்பிடத்தைப்பெற வேண்டும் என்ற உறுதியுடன் சாதனைகள் பல புரிந்து வேளாண்துறையில் சாதித்துக்காட்டிய டாக்டர் செல்வி அவர்கள் உழவுத்தொழிலான நம் குலத் தொழிலுக்கு வந்தனை செய்துள்ளார்.

இவருடைய வெற்றிக்கு உறுதுணையாயிருப்பவர் கோவை முத்து குமாரசாமி டெக்ஸ்டைல்ஸ்–ல் துணைத்தலைவராகப் பணியாற்றும் இவரது கணவர் திரு. எம்.இ.வி.செல்வம் அவர்கள் ஆவார். இத்தம்பதியரின் 10 வகுப்பு படிக்கும் மகன் பெயர் தனுஷ்.

கொங்கு வேளாளர் குலத் தொழிலான வேளாண்துறையில் சாதனைகள் படைத்து, கொங்கினத்திற்குப்பெருமைசேர்க்கும் டாக்டர் ஏ.செல்வி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## ப.மோகன்

சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம் மஞ்சள்கல்பட்டி கிராமம் வளையான் காட்டினைச் சேர்ந்த திரு. பழனிசாமி கவுண்டர் – திருமதி இராஜம்மாள் தம்பதியருக்கு 1972 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் திரு. ப.மோகன் அவர்கள்.

பள்ளிப்படிப்பை சங்ககிரி மற்றும் திருச்செங்கோடு உயர்நிலைப்பள்ளியிலும், B.E., (Mechanical) பட்டப்படிப்பை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், பிளாஸ்டிக் சம்பந்தமான முதுகலை பட்டயப் படிப்பை (PGDPE) சென்னை CIPET நிறுவனத்திலும் முடித்தார்.

1995 ஆம் ஆண்டு கோவை PRICOL நிறுவனத்தில் நான்கு மாதம் பணிபுரிந்த பிறகு, 1997 ல் PVC பைப்களைத் தயாரிப்பதற்காக, தனது 24 வது வயதில் தனது சொந்த ஊரிலேயே சக்தி பாலிமர்ஸ் என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். 2000 ம் ஆண்டில் Flexible Hose எனப்படும் விவசாயம் மற்றும் வீட்டு உபயோகத்திற்குப் பயன்படும் பச்சை நிற வளையும் பைப்களைத் தயாரித்தார். 2004 ஆம் ஆண்டில் PPR எனப்படும் புதியவகை பைப்களை தென்னிந்தியாவிலேயே முதலாவதாக ஜெர்மன் தொழில் நுட்பத்துடன் தொடங்கினார். 2006 ஆம் ஆண்டு பிளாஸ்டிக் தண்ணீர்த் தொட்டிகளையும் தயாரிக்க ஆரம்பித்தார். தனது நிறுவனத்திற்கு ISO 9001 தரச்சான்று பெற்ற இவர், 2008 ஆம்ஆண்டு முற்றிலும் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களைக்கொண்டு PPR பைப்புகளுக்கான பிட்டிங்குகளைத் தயாரித்து வருகிறார்.

பத்தே ஆண்டுகளில் மிகச்சிறிய வயதில் பிளாஸ்டிக் சம்பந்தமான தொழிலில் வெற்றிகள் பல பெற்று சாதனை படைத்துள்ளார். இவருடைய தயாரிப்புகள் அகில இந்திய

அளவில் மட்டுமல்லாது, யேமன், ஆப்பிரிக்கா மற்றும் இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன. கிட்டத்தட்ட 100 கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறார்.

கொங்கு சமுதாய வளர்ச்சியிலும், சமூக சேவையிலும் மிகவும் ஆர்வம் கொண்டுள்ள இவர் இதற்கான பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகிறார். திருச்செங்கோடு மற்றும் சங்ககிரி கொங்கு இளைஞர் சங்கங்களின் தீவிர உறுப்பினர் இவர். கல்லூரி நாட்களிலேயே பொதுத்தொண்டிற்கான 'Best Rotract' என்ற விருதினைப் பெற்றுள்ளார். 2001 ஆம் ஆண்டு சங்ககிரி அரிமா சங்கத்தின் சாசன தலைவராகவும், 2007 ஆம் ஆண்டு வட்டாரத் தலைவராகவும் பொறுப்பேற்று, பல்வேறு சமுதாய நிகழ்ச்சிகளை மிகச்சிறப்பாக நடத்திக் கொடுத்தவர் இவர்.

இளம் தொழிலதிபர் மோகன் அவர்களின் சக்தி நிறுவனம் தனது பல்வேறு தயாரிப்புகளில் சிறந்து விளங்கியமைக்காக, திரு.மோகன் அவர்களுக்கு GEM of India மற்றும் Rajiv Gandhi Award for Excellence ஆகிய விருதுகள் அகில இந்திய சாதனையாளர்கள் மாநாட்டில் வழங்கப்பட்டன. இது இவரின் சாதனைக்குச்சான்றாக விளங்குகிறது. 2001 ஆம் ஆண்டு Lions International President வழங்கிய Best Zone Chairman என்ற விருதையும், இவர் பெற்றார். தொழில் நிமித்தமாக பல வெளிநாடுகளுக்குச் சென்று தொழிலை மேலும் மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்.

2002 ஆம் ஆண்டு இவரின் திருமணம் நடைபெற்றது. மனைவி பெயர் சுதா பிரியதர்சினி, மகள் ஷிவாணி UKG வகுப்பில் படித்து வருகிறாள்.

சிறிய வயதிலேயே சொந்தத் தொழில் செய்யும் ஆர்வம் பெற்று, தனக்கென ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து, அதில் நல்ல புலமையும் பயிற்சியும் பெற்று, சொந்த ஊரிலேயே தொழிலைத் தொடங்கி வெற்றிகள் பெற்றிட்ட திரு. மோகன் அவர்கள் கொங்கு சமுதாயத்தின் எழுச்சி மிக்க இளைஞர்களில் ஒருவராகத் திகழ்வதோடு மற்ற இளைஞர்களுக்குச் சிறந்த முன்னுதாரணமாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகிறார். இவருடைய சாதனைகள் மேன்மேலும் தொடரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சிறந்த இளம் தொழிலதிபராக விளங்கும். திரு. மோகன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## செல்வி பி.அபராஜிதா

நாமக்கல் கொக்கராபேட்டையைச் சொந்த ஊராகக்கொண்டு சென்னையில் வசித்து வரும் தொழிலதிபர் திரு. பி.பாலமுருகன் – திருமதி சுமதி ஆகியோரின் மகளாகப்பிறந்தவர் 14 வயது நிரம்பிய செல்வி அபராஜிதா. நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் கொங்குமாமணி திரு. பிரிசிசன் கே.பழனியப்பன் – திருமதி சகுந்தலா ஆகியோரின் பேத்தியான செல்வி அபராஜிதா சென்னை சர்ச்பார்க் மாணவியாவார். இவர் ஸ்குவாஷ் விளையாட்டில் பல சாதனைகள் புரிந்துள்ளார்.

தனது 9வது வயதிலேயே ஸ்குவாஷ் விளையாட ஆரம்பித்த இவர், கடந்த 5 வருடங்களாக இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும், பல வெளிநாடுகளிலும் நடந்த போட்டிகளில் கலந்துகொண்டு பல பரிசுகளைப் பெற்றுள்ளார். 2000 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இவருக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம் ரூபாய் ஊக்கப்பரிசாக அளித்து வருகிறது. இவருடைய திறமையையும், பெற்ற பரிசுகளையும் கேட்டறிந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் இவர் நெற்றியில் முத்தமிட்டு, உச்சிமுகந்து பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது சங்கம் இரண்டு முறை தங்க மெடல் கொடுத்து இவரைப்பாராட்டி மேலும் சாதனைகள் பெற ஊக்குவித்து வாழ்த்தியது. அந்த வாழ்த்தினை மெய்ப்பிக்கும் வண்ணம், இந்த வருடம் மலேசிய நாட்டில் நடந்த International Squash போட்டியில் கலந்துகொண்டு, முதற்பரிசைப்பெற்று தங்கம் வென்றார். இந்த வெற்றியைப் பாராட்டி The Hindu, Indian Express, Deccan Chronicle, Times of India போன்ற முன்னணி நாளிதழ்கள் செய்திகளை வெளியிட்டது மட்டுமல்லாமல், இவருடைய பேட்டியையும் படத்துடன் பிரசுரித்து புகழாரம் சூட்டியிருந்தன.

இந்த வருடம் மே மாதம் கொரியாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில்

கலந்துகொண்ட இந்திய அணியில் இவர் இடம் பெற்றிருந்தார். அந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு ஆசியாவிலேயே 7 வதாக வந்தார் என்பது இவரது சாதனை மகுடத்தில் இன்னொரு வைரக்கல்லாகும்.

இவருடைய அடுத்த குறிக்கோள் 2010 ஆம்ஆண்டு டெல்லியில் நடக்கவுள்ள காமன்வெல்த் போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெற வேண்டும் என்பதாகும். அதற்கான முதற்கட்ட தேர்வில் வெற்றிபெற்றுள்ள இவர், இறுதிக்கட்ட தேர்விலும் வெற்றி பெற கடுமையான பயிற்சியை மேற்கொண்டு வருகிறார்.

விளையாட்டில் மட்டுமன்றி, படிப்பிலும் சிறந்து விளங்கும் இவர் பள்ளியின் All Round Peroformance விருதினைப்பெற்றுள்ளார். அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள எப்.எம்.ரேடியோ இவருடைய சிறப்புப்பேட்டியை ஒலிபரப்பி இவரைப்பெருமை படுத்தியது.

இவரது சாதனைகளில் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | Malaysian Junior Open | Winner |
| 2. | Penang Junior Open | Winner |
| 3. | Singapore Junior Open | Runner |
| 4. | German Junior Open | Runner |
| 5. | Scottish Junior Open | Runner |
| 6. | Hong-Kong Junior Open | Runner |
| 7 | All India Squash Competition, Delhi | Winner |
| 8 | Inter School Republic Day Sports | Winner |
| 9 | Karnataka State Open | Winner |
| 10 | Grand Finals, Chennai | Runner |

கடின பயிற்சி, அயரா உழைப்பு, குடும்பத்தாரின் ஊக்கம், தன்னம்பிக்கை போன்ற தாரக மந்திரங்களைக் கொண்டு, விளையாட்டுத்துறையில் இந்த இளம் வயதில் பெரும் சாதனைகள் புரிந்து, கொங்கினத்திற்கும் தமிழகத்திற்கும் பெருமை சேர்த்துள்ள செல்வி அபராஜிதா அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருதை வழங்கிப் பாராட்டுகிறது. இனிவரும் போட்டிகளிலும், குறிப்பாக 2010 டெல்லி காமன்வெல்த் போட்டியிலும் செல்வி அபராஜிதா சாதனை படைக்க சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖❖

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## பி. பொன்னுரங்கன்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்

என்ற வள்ளுவர் வாக்கு பொய்யாய்ப்போனதோ என்று உழவுத்தொழிலில் ஈடுபட்டு, நாளெல்லாம் உழைத்தும் பயனொன்றும் கிட்டாது துயரப்படும் நம்மின மக்களுக்காக குரல் கொடுக்கும் அருமைப்பெரியோர்களில் ஒருவர்தான் திரு. பி.பொன்னுரங்கன். தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் கே.வேட்ரப்பட்டி கிராமத்தில் 1946 ஆம் ஆண்டு திரு. வெள்ளை பொன்னாக்கவுண்டர் – திருமதி தீத்தியம்மாள் தம்பதியருக்கு மகனாகப்பிறந்தவர், திரு. பி.பொன்னுரங்கன்.

5 ம் வகுப்பு வரை மட்டுமே படித்த இவர் தபால் வழியில் மேழிச்செல்வம், ஏர் உழவன் போன்ற பத்திரிக்கைகளைப் பெற்று தமிழ் மற்றும் ஆங்கில அறிவை வளர்த்துக்கொண்டார். இவருடைய மனைவி பெயர் இந்திராணி. மஞ்சுளா, காந்திமதி, விஜயலட்சுமி ஆகிய மூன்று மகள்களும் திருவேங்கடம் என்ற மகனும் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் நடந்து விட்டது.

1974 ஆம் ஆண்டு அரூர் முத்துக்கவுண்டர் அவர்கள் தலைமையில் நடந்த விவசாய மாநாட்டில் இவர் துணைச்செயலாளராகச் செயல்பட்டார். கிராமம் தோறும் விவசாய சங்கக்கிளை அமைப்பு, ஏர் உழவன் சந்தா சேர்த்தல், தீவிர விவசாய சாகுபடி, வானொலியில் பேட்டி, சிறந்த சாகுபடிக்காக மாவட்ட ஆட்சித்தலைவரிடம் பரிசு பெற்றல் போன்ற நிகழ்ச்சிகள் இவரைத் தீவிர விவசாயியாக மாற்றின. அரூரில் 10,000 பேர் பங்கேற்ற மாட்டுவண்டி ஊர்வலத்தில் பங்கேற்றார். அப்போது இவர் எழுதிய ‘ஏர் உழவன் பாடல்கள்’ என்ற நூல் வெளியிடப்பட்டது.

1979 ஆம் ஆண்டு ஐதராபாத்தில் நடந்த அகில இந்திய விவசாயிகள் மாநாட்டில் கலந்துகொண்டார். மின்சார கட்டணம் கொடா போராட்டத்தில் கலந்துகொண்டார். 1981 ல் திருச்சி விவசாயிகள் மாநாட்டில் கலந்துகொண்டார். 1986 ஆம் ஆண்டு கிராம விவசாய தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பாக இந்தூரில் நடந்த அகில இந்திய மாநாட்டில் கலந்துகொண்டார். விவசாயம் சம்பந்தப்பட்ட நிறைய கவிதைகளை எழுதியுள்ளார். 1995 ஆம் ஆண்டு டெல்லியில் நடந்த விஞ்ஞான விவசாயக்கூட்டத்தில் பங்கேற்றார். கொங்கு நாடு முன்னேற்றப்பேரவையின் மாநில துணைச்செயலாளராகப்பணியாற்றியுள்ளார். 1995 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்ட மாநாட்டில் பங்கேற்றார். அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

விவசாயக்கடன் தள்ளுப்படிக்காக இவர் மற்ற தலைவர்களுடன் இணைந்து போராடியுள்ளார். ‘உலகைக் காக்கும் உழவர் முழக்கம்’ என்ற நூல் உட்பட இதுவரை நான்கு நூல்களை எழுதி வெளியிட்டு, பலரது பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார். 2007 ஆம் ஆண்டு டெல்லியில் நடந்த அகில இந்திய விவசாயிகள் மாநாட்டில் பங்கேற்றார்.

கொங்கினச் சான்றோர்கள் அரூர் முத்துக்கவுண்டர் திரு. டி.என்.தீர்த்தகிரி கவுண்டர், நல்லசேனாதிபதி சர்க்கரை மன்றாடியார், திரு.செங்கோட்டுவேல், திரு.பெஸ்ட், எஸ்.இராமசாமி, திரு.கோவை செழியன், திரு.செல்லமுத்து, போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அச்சான்றோர்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றவர். இவர் சிறந்த விவசாயியாக இருப்பதுடன், சிறந்த சாகுபடிக்காகவும், நவீன விவசாய முறைகளைப் பின்பற்றியதற்காகவும் பல பரிசுகளைப் பெற்றார்.

மிகவும் பின்தங்கிய தருமபுரி மாவட்டத்தில் சிறிய கிராமத்தில், எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து விவசாயத்தொழிலில் தீவிரமாக ஈடுபட்டது மட்டுமல்லாமல் விவசாய சங்கங்களில் தீவிர பங்கு பெற்று, விவசாயிகளின் நலன்களுக்காகப் பல்வேறு போராட்டங்களிலும், கூட்டங்களிலும் கலந்துகொண்டு பாடுபட்ட சிறந்த விவசாய வழிகாட்டியாகத் திகழும் புலவர் பி.பொன்னுரங்கம் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு வேளாண் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖❖

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## கே.திருமலைசாமி

கொங்கு வேளாளர் இன மக்கள் விவசாயத் தொழில் செய்து ஊர் போற்ற, செல்வம் கொழிக்க, செல்வாக்கோடு வாழ்ந்த காலம் இன்று மலையேறிவிட்டது. இன்று கடன்பட்டு, கஷ்டப்பட்டு, நஷ்டப்பட்டு செய்யும் தொழிலாக விவசாயத் தொழில் மாறிவிட்டது. இத்தகைய சூழ்நிலையிலும், விவசாயத்தை விஞ்ஞான ரீதியாக அணுகி, லாபம் சம்பாதிக்கின்ற வகையில், சிறந்த முறையில் விவசாயம் செய்துகொண்டு வருவதோடு மட்டுமல்லாமல் தன்பகுதி மக்களுக்குச் சிறந்த விவசாய வழிகாட்டியாகவும் விளங்குபவர் திரு.கே.திருமலைசாமி அவர்கள்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகில் உள்ள சாமியார் புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.குப்புசாமி கவுண்டர் – திருமதி கருப்பாயம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் 76 வயது நிரம்பிய திரு. திருமலைசாமி அவர்கள். திண்டுக்கல் செண்ட் மேரிஸ் உயர்நிலைப்பள்ளியில் SSLC படித்தார். பிறகு மதுரை கலைக்கல்லூரியில் இண்டர்மீடியேட் படித்து முடித்தார்.

அரசாங்க வேலை கிடைத்த போதும், விவசாயத்தின் மீது கொண்ட பெரும் ஆர்வம் காரணமாக, 1956 ஆம் ஆண்டுசொந்த ஊருக்குத் திரும்பி சுமார் 15 ஏக்கரில் விவசாயம் செய்ய ஆரம்பித்தார். அதே ஆண்டு ஒட்டன்சத்திரத்தில் ஓர் உரக்கடையை ஆரம்பித்தார். பூச்சி மருந்துகள், விதைகள், உரங்கள் முதலானவற்றை விவசாயிகளுக்குத் தரமுள்ளதாகவும், குறைந்த விலையிலும் வழங்கினார். நல்ல புகழ்பெற்ற நிறுவனங்களின் வினியோக உரிமை பெற்று ஒட்டன் சத்திரம் பகுதியிலுள்ள பெரும்பாலான விவசாயிகள் பயன்படும் வண்ணம் விவசாயத்திற்குத் தேவையான இடுபொருள்களை வாங்கி விற்பனை செய்தார்.

கோவை வேளாண் கல்லூரியில் சேர்ந்து விவசாய நுணுக்கங்கள் சம்பந்தப்பட்ட குறுகிய கால பயிற்சியைப்பெற்றார். அரசு வேளாண் அதிகாரிகளிடம் விவசாயத்திற்குத் தேவையான விளக்கங்களையும், அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெரிதும் விரும்பிப் பெற்றார்.இத்தோடு விவசாயத்தில் கிடைத்த அனுபவமும் சேர்ந்து இவரை ஒரு சிறந்த விவசாயியாகவும், ஒரு சிறந்த விவசாய ஆலோசகராகவும் உருவாக்கின. ஒட்டன்சத்திரம் பகுதிகளில் விவசாயம் சம்பந்தமாக யாருக்காவது ஏதாவது சந்தேகம் வந்தால் அவர்கள் உடனே தொடர்பு கொள்வது திருமலைசாமி அவர்களைத்தான். இவரை ஒரு நடமாடும் விவசாயப்பல்கலைக்கழகம் என்று இப்பகுதி மக்கள் கூறுவது இவரது திறமைக்கும் அறிவுக்கும் சான்றாக உளளது. ஒட்டன் சத்திரம் விவசாய இடுபொருள் வியாபாரிகள் சங்கத் தலைவராகப் பணியாற்றி உள்ளார்.

விஞ்ஞான விவசாயம் பற்றிய விழிப்புணர்ச்சி, எந்தப்பயிரை எப்பொழுது பயிரிடுவது, எப்படிப்பராமரிப்பது, எந்த உரத்தை எந்த அளவுக்கு எந்தக்கால கட்டத்தில் இடுவது போன்ற ஆலோசனைகளை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கினார். தரமான இரசாயன கலப்பு உரங்களை ஷாவேலஸ் போன்ற நிறுவனங்களிடமிருந்து ஏஜென்சி எடுத்து பழனி வட்டம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கி உதவி செய்தார். காய்கறி வகைகள், மக்காச்சோளம், காப்பி பயிர்கள், தென்னை மரங்கள், வாழை போன்ற சாகுபடிகளுக்கு கடந்த 50 வருடங்களாக இவரது ஆலோசனையும், உதவியும் பெருமளவில் உதவி செய்தன. பயிர்சாகுபடி குறித்த இவரது வானொலி உரைகள் பலராலும் பாராட்டப்பட்டன. பலருக்கும் பயன்பட்டன.

இவரது திருமணம் 1963 ஆம் ஆண்டு நடைபெற்றது. மனைவி பெயர் உமாதேவி. இவருக்கு பிரேமா, சித்ரா, முத்துலட்சுமி, விஜயலட்சுமி ஆகிய நான்கு மகள்களும், திருமலைராஜ், பாலசுப்பிரமணி ஆகிய மகன்களும் உள்ளனர். பாலசுப்பிரமணி தவிர அனைவருக்கும் திருமணமாகிவிட்டது. பாலசுப்பிரமணி பி.எல் படித்துவிட்டு ஸ்காட்லேண்டில் சைபர் கிரைம் பற்றிய சிறப்புப் பயிற்சி பெற்று வருகிறார்.

சிறந்த விவசாய வழிகாட்டியாக விளங்கும் திரு. திருமலைசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு வேளாண் சாதனையாளர்’ விருதை வழங்கிச் சிறப்பிக்கிறது.

❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி வெ.செ.மைனாவதி

கோபிசெட்டிப்பாளையம் வெள்ளியங்காட்டுப் புதூர் திரு.வி.என்.செங்கோட்டையன் – திருமதி பூமணி ஆகியோரின் மகள் செல்வி வெ.செ.மைனாவதி கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மண் மற்றும் பயிர் மேலாண்மை மையத்தில், களைக்கட்டுப்பாட்டுப் பிரிவில் முதுநிலை ஆராய்ச்சியாளராகப் பணியாற்றி வருகிறார். 26 வயதே நிறைந்த இவர், அகில இந்திய களை அறிவியல் குழுமத்தின் சிறந்த முதுநிலை ஆராய்ச்சிக்கான 2007 – 2008 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இப்பரிசு அகில இந்திய விஞ்ஞான கழகத்தின் ஓர் அங்கமான ஜபல்பூரில் அமைந்துள்ள களை அறிவியலுக்கான தேசிய மையத்தால் அளிக்கப்பட்டது. இவ்விருதானது, களை அறிவியல் மக்காச்சோளத்தில் களை எடுக்கும் கருவிகளின் செயல்திறன் மதிப்பீடு என்ற முதுநிலை ஆராய்ச்சிக் கட்டுரைக்காக வழங்கப்பட்டது. இந்த ஆராய்ச்சியின் முடிவானது களை எடுக்கும் கருவியை உபயோகிப்பதின் மூலம், களை எடுக்க ஆகும் நேரமும், செலவும் குறையும் என்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இம்முடிவானது, ஆள் பற்றாக்குறையாக உள்ள இக்கால கட்டத்தில் விவசாயிகளுக்கு உறுதுணையாக அமையும்.

ஆழியாரில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சியாளராய் பணியாற்றியுள்ள இவர், விவசாயிகளுக்குப் புதிய தொழில் நுட்பங்களை எடுத்துரைத்துள்ளார்.

வேளாண்துறையில் இளம் வயதில் சாதனை புரிந்துள்ள செல்வி மைனாவதிக்கு இன்று பிறந்த நாள் என்பது குறிப்பிடத்தக்கது. பிறந்த நாளில் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருதைப்பெறும் இவரைப்பாராட்டுவதுடன் மேலும் பல சாதனைகள் புரிந்திட கொங்கு நண்பர்கள் சங்கம் பெரிதும் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖❖

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

17-08-2008 அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு
பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1. | Ball Throw (Boys)<br>III & IV Std. | I அபிக்கண்ணன் பெரியசாமி<br>II பிரதீப் பாலசுப்பிரமணியன்<br>III சசிதரன் இராஜேந்திரன் |
| 2. | Ball Throw (Boys)<br>V & VI Std. | I பார்த்தீஸ் தாமோதரசாமி<br>II பிரவீன் இராமசாமி<br>III சுகில் இளங்கோ |
| 3 | Ball Throw (Boys)<br>VII & VIII Std. | I சந்தீப்<br>II சிவசூர்யா<br>III கதிரவன் |
| 4 | Ball Throw (Boys)<br>IX & X Std. | I ரகுசந்த் ராமசாமி<br>II சூர்யநாத்<br>III கோபாலகிருஷ்ணன் |
| 5 | Shotput (Boys)<br>16 - 20 Years | I பிரதீப்<br>II ரகுசந்த் ராமசாமி<br>III பிரியநந்தன் ராஜேந்திரன் |
| 6 | Shotput (Boys)<br>21 to 30 Years | I டி.சரவணகுமார்<br>II ஸ்ரீசூர்யா<br>III கே.எஸ்.ராம்மோகன் |
| 7 | Shotput (Men)<br>31 to 40 Years | I ஆர்.எஸ்.மயில்வண்ணன்<br>II ஆர்.சுந்தர்<br>III எஸ்.ரவிகுமார் |

| | | | |
|---|---|---|---|
| 8 | Shotput (Men)<br>41 to 50 Years | I | ரவிச்சந்திரன் |
| | | II | ஆர்.கே.பாலன் |
| | | III | எம்.ராமசாமி |
| 9 | Shotput (Mens)<br>51 to 60 Years | I | கே.ராஜாமணி |
| | | II | சதாசிவம் |
| | | III | டி.நடராஜ் |
| 10 | Shotput (Men)<br>61 and above | I | பழனியாண்டி |
| | | II | பி.முத்துசாமி |
| | | III | சுப்பிரமணியம் |
| 11 | Lucky Corner (Men) | I | பாலசுப்பிரமணியன் |
| | | II | பி.இரவி |
| | | III | என்.செங்கோடன் |
| 12 | Running Race (Boys)<br>LKG & UKG 25 Metres. | I | குருதேவ் |
| | | II | அகிலன் செந்தில் வேலன் |
| | | III | விவேகன் ஸ்ரீரங்கராயன்<br>தாசின் கிருஷ்ணசாமி<br>தர்னிஷ் கணேஷ் |
| 13 | Running Race<br>I & II Std. (Boys) 25 Metres | I | ஜெயன் முருகன் |
| | | II | கிரிஜெய் ராகவ் ஜெயவேல் |
| | | III | அன்வித் ரிஷி ரமேஷ்<br>விக்னேஷ் ரவிச்சந்திரன்<br>கலையமுதன் மகாதேவன் |
| 14 | Running Race<br>50 Metres (Boys)<br>III & IV Std. | I | பிரதீப் பாலசுப்பிரமணியன் |
| | | II | அபிக்கண்ணன் பெரியசாமி |
| | | III | நித்திஷ் ராஜமாரப்பன் |
| 15 | Running Race<br>75 Metres (Boys)<br>V & VI Std. | I | பிரவின் இராமசாமி |
| | | II | கிரிமுகுந்தன் குமார் |
| | | III | சனோஜ் செந்தில் வேலன் |


| | | |
|---|---|---|
| 16 | Running Race<br>200 Metres (Boys)<br>VII & VIII Std. | I பிரேம் ஆனந்த் சீனிவாசன்<br>II ஆஷ்வந்த் லட்சுமணசாமி<br>III கதிரவன் சந்திரசேகரன் |
| 17 | Running Race<br>400 Metres (Boys)<br>IX & X Std. | I சூர்யநந்தன் இராஜேந்திரன்<br>II ரகுசந்த் இராமசாமி |
| 18 | Running Race<br>200 Metres (Boys)<br>16 to 20 Years | I பிரியயநந்தன் இராஜேந்திரன் |
| 19 | Running Race<br>200 Metres (Boys)<br>21 to 30 years | I கே.சுரேந்தர்<br>II வி.தனபாலன்<br>III எஸ்.ஸ்ரீசூர்யா |
| 20 | Running Race<br>100 Metres (Men)<br>31 to 40 years | I எஸ்.சரவணன்<br>II ஆர்.முத்துசாமி<br>III கே.தனராஜ் |
| 21 | Running Race<br>100 Metres (Men)<br>41 to 50 years | I எஸ்.ஆர்.ரவிச்சந்திரன்<br>II கே.பி.சுப்ரமணியம்<br>III முருகவேல் |
| 22 | Running Race<br>100 Metres (Men)<br>51 to 60 years | I நடராஜன்<br>II கிருஷ்ணசாமி<br>III சங்கமேஸ்வரன் |
| 23 | Walking Race (Men)<br>50 Metres<br>Above 60 years | I பழனியாண்டி<br>II அண்ணாமலை<br>III முத்துசாமி |
| 24 | Ball Throw (Girls)<br>III & IV Std. | I எம். அஞ்சனா<br>II எஸ்.அக்ஸயா<br>III ஏ.அனுரிதா |

| | | | |
|---|---|---|---|
| 25 | Ball Throw (Girls)<br>V & VI Std. | I | சி.எஸ்.ரம்யபிரியா |
| | | II | ஞானதீபிகா முருகவேல்<br>ஹரிணி பெரியசாமி |
| | | III | ஆர்.மனுமிதா |
| 26 | Ball Throw (Girls)<br>VII & VIII Std. | I | எம்.அறிவுச்சுடர் |
| | | II | ஜெ.ஏ.வனிஷா |
| | | III | இ.அம்ரிதா |
| 27 | Ball Throw (Girls)<br>IX & X Std. | I | ரம்யா சேகர் |
| | | II | ஆர்.அபிநயா<br>எஸ்.பிரியங்கா |
| | | III | ரூபஸ்ரீ முருகேசன் |
| 28 | Ball Throw (Girls)<br>16 to 20 years | I | கே.பானுபிரியதர்ஷினி |
| | | II | எஸ்.பத்மபிரியா |
| | | III | ஆர்.செல்லகிருத்திகா |
| 29 | Ball Throw (Girls)<br>21 to 30 years | I | எஸ்.கீதா |
| | | II | ஏ.திகலம் |
| | | III | ஏ.பத்மபிரியா |
| 30 | Ball Throw (Women)<br>31 to 40 years | I | கே.வசந்தி |
| | | II | எஸ்.சாவித்திரி |
| | | III | இ.சித்ரா |
| 31 | Ball Throw (Women)<br>41 to 50 years | I | என்.திலகவதி |
| | | II | கே.ஜெயமணி |
| | | III | சாந்திமணி<br>கே.கலைச்செல்வி |
| 32 | Ball Throw (Women)<br>51 to 60 years | I | மணிமேகலை புஷ்பராஜ் |
| | | II | கே.வைரமணி |
| | | III | அம்ரிதா |

| | | | |
|---|---|---|---|
| 33 | Ball Throw (Women)<br>61 and above | I<br>II | சிவகாமி<br>எஸ்.சரஸ்வதி |
| 34 | Lucky Corner (Ladies)<br>above 18 years | I<br>II<br>III | ஆர்.ரேவதி<br>பத்மபிரியா<br>மேகவர்ணம் ராஜி |
| 35 | Running Race (Girls)<br>25 Metres<br>LKG & UKG | I<br>II<br>III | சஞ்சுகிதா ராஜா<br>தட்சன்யா அசோக்<br>ருபித்ரா கண்ணன்<br>கீர்த்தனா கோவிந்தராஜ்<br>லக்ஷதா சுந்தர்<br>ஶ்ரீரஞ்சனா பத்ரிநாராயணன் |
| 36 | Ball Throw (Girls)<br>25 Metres<br>I & II Std | I<br>II<br>III | அக்ஷயா இளமுருகன்<br>ஹோவிதா பாலசுப்பிமணியன்<br>வேதிகா சேகர் |
| 37 | Ball Throw (Girls)<br>50 Metres<br>III & IV Std | I<br>II<br>III | அக்ஷயா செந்தில் குமார்<br>அஞ்சனா முருகன்<br>கீர்த்தனா குமார் |
| 38 | Ball Throw (Girls)<br>50 Metres<br>V & VI Std | I<br>II<br>III | ரம்யபிரியா சுப்ரமணியன்<br>லத்திகா வரதரான்<br>கார்த்தியாயினி மணிவண்ணன் |
| 39 | Ball Throw (Girls)<br>75 Metres<br>VII & VIII Std | I<br>II<br>III | ஹரினி கோவிந்தராஜ்<br>அறிவுச்சுடர் மகாதேவன்<br>வினிஷா ஜெயவேல் |
| 40 | Ball Throw (Girls)<br>100 Metres<br>IX & X Std | I<br>II<br>III | ரம்யா சேகர்<br>அபிநயா ராமசாமி<br>தாரினி மணிவண்ணன் |

| | | | |
|---|---|---|---|
| 41 | Ball Throw (Girls) | I | கீர்த்திகா ராஜீ |
| | 100 Metres | II | சுமிதா ராஜகோபாலன் |
| | 16 & 20 years | III | ரோகினி சதாசிவம் |
| 42 | Ball Throw (Girls) | I | பத்மபிரியா கேசவ சுப்ரமணியம் |
| | 100 Metres | II | கீதா செந்தில்குமார் |
| | 21 & 30 years | III | பூர்ணிமா தேவி முத்துசாமி |
| 43 | Running Race (Women) | I | சாவித்திரி சீனிவாசன் |
| | 100 Metres | II | விஜயலட்சுமி கண்ணன் |
| | 31 & 40 years | III | ராஜாமணி சுப்ரமணியன் |
| | | | சுபா ஜெயவேல் |
| | | | கலையரசி இராஜன் |
| 44 | Running Race (Women) | I | திலகவதி நடேசன் |
| | 100 Metres | II | தமயந்தி இராஜாமணி |
| | 41 to 50 years | III | செல்லி இராமய்யா |

❖❖❖❖❖❖



# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

09–08–2008 அன்று வெள்ளிவிழா இல்லத்தில் நடந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | போட்டிகளின் பெயர் | | பரிசு பெற்றோர் I & II & III பரிசு | |
|---|---|---|---|---|
| 1. | ஓவியப்போட்டி | | I | சங்கவிதா செந்தில் குமார் |
| | 1 – 3 வயது வரை | | II | அனுரிதுன் ரவிச்சந்திரன் |
| 2. | ஓவியப்போட்டி | | I | ஜெயந்த் முருகன் |
| | 3 – 5 வயது வரை | | II | வேதிகா சேகர் |
| | | | III | கார்த்திகா ரவிகுமார் |
| 3. | ஓவியப்போட்டி | | I | மனுமிதா ரவிச்சந்திரன் |
| | 6 – 10 வயது வரை | | II | அபிக்கண்ணன் பெரியசாமி |
| | | | III | அஞ்சனா முருகன் |
| | | | | நிமிதா ரவிகுமார் |
| | | ஆறுதல் பரிசு | | வி.மிதுன்குமார் |
| | | | | ஸ்ரீஅபிதா செந்தில்குமார் |
| | | | | ஹேமவிதா சுப்ரமணியன் |
| | | | | ஆகாஷ் விஜய்பாலசுப்பிரமணியம் |
| | | | | அனுஷா ராஜி |
| 4. | ஓவியப்போட்டி | | I | பிரேம் ஆனந்த் சீனிவாசன் |
| | 11 – 15 வயது வரை | | II | அமுதினி கொங்குவேள் |
| | | | III | சிபி பெரியசாமி |
| | | ஆறுதல் பரிசு | | கிருத்திகா ராஜி |
| | | | | கலைவாணன் சதாசிவம் |
| 5. | மாறுவேடப் போட்டி | | I | வேதிகா சேகர் |
| | 3 – 5 வயது வரை | | II | ஜெயந்த் முருகன் |
| | | | III | அனுரிதுன் ரவிச்சந்திரன் |
| | | | | சங்கவிதா செந்தில்குமார் |
| | | ஆறுதல் பரிசு | | கார்த்திகா ரவிக்குமார் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | மாறுவேடப் போட்டி | | I | மனுமிதா ரவிச்சந்திரன் |
| | 6 – 10 வயது வரை | | II | மிதுன்குமார் பாலன் |
| | | | III | ஸ்ரீ அபிதா செந்தில்குமார் |
| | | ஆறுதல் பரிசு | | நிமிதா ரவிகுமார் |
| 7. | பாட்டுப் போட்டி | | I | கார்த்திகா ரவிகுமார் |
| | 3 – 5 வயது வரை | | II | சங்கவிதா செந்தில்குமார் |
| | | | III | தேவிகா சேகர் |
| 8. | பாட்டுப் போட்டி | | I | லத்திகா வரதராஜன் |
| | 6 – 10 வயது வரை | | II | மனுமிதா ரவிச்சந்திரன் |
| | | | III | அஞ்சனா முருகன் |
| | | | | நிமிதா ரவிக்குமார் |
| | | | | ஸ்ரீ அபிதா செந்தில்குமார் |
| | | ஆறுதல் பரிசு | | அனுஷா ராஜி |
| 9. | பாட்டுப் போட்டி | | I | அமுதினி கொங்குவேள் |
| | 11 – 15 வயது வரை | | II | கலைவாணன் சதாசிவம் |
| | | | III | பிரேம்ஆனந்த் |
| 10. | பேச்சுப் போட்டி | | I | அபிக்கண்ணன் பெரியசாமி |
| | 6 – 10 வயது வரை | | II | அஞ்சனா முருகன் |
| | | | III | நிமிதா ரவிகுமார் |
| | | | | அபிதா செந்தில்குமார் |
| | | ஆறுதல் பரிசு | | மிதுன்குமார் பாலன் |
| 11. | பேச்சுப் போட்டி | | I | அமுதினி கொங்குவேள் |
| | 11 – 15 வயது வரை | | II | லத்திகா வரதராஜன் |
| | | | III | யாமினி வடிவேல் |
| 12. | நடனப் போட்டி (பெண்) | | I | வேதிகா சேகர் |
| | 5 வயது வரை | | II | கார்த்திகா ரவிக்குமார் |
| 13. | நடனப் போட்டி | | I | மனுமிதா ரவிச்சந்திரன் |
| | 6 – 10 வயது வரை | | II | நிமிதா ரவிகுமார் |
| | | | III | அனுஷா ராஜி |

| | | | |
|---|---|---|---|
| 14. | நடனப் போட்டி (ஆண்) | I | பிரேம் ஆனந்த் |
| | | II | வருண் |
| 15. | கோலப்போட்டி | I | கீதா செந்தில்குமார் |
| | | | தமயந்தி ராஜாமணி |
| | | II | தேன்மொழி ரவிச்சந்திரன் |
| | | | சித்ரா ரவிகுமார் |
| | | III | விஜயலட்சுமி இராமசாமி |
| | | | மேகவர்ணம் ராஜி |
| | ஆறுதல் பரிசு | | பூங்கொடி சந்திரசேகர் |
| 16. | கட்டுரைப் போட்டி | I | எஸ்.பி.சிபி |
| | 8ம் வகுப்பு வரை | II | அமுதினி கொங்குவேள் |
| | | III | சி.என்.மணிவண்ணன் |
| 17. | கட்டுரைப் போட்டி | I | ராஜ் கணேஷ் |
| | 8–12 ம் வகுப்பு வரை | | யாழினி கொங்குவேள் |
| | | II | ஆர்.செல்வவிக்னேஷ் |
| | | | இரா. கிருத்திகா |
| | | III | சி.என்.சரவணன் |
| 18. | கவிதைப் போட்டி | I | சி.என்.மணிவண்ணன் |
| | 8ம் வகுப்பு வரை | II | அமுதினி கொங்குவேள் |
| 19. | கவிதைப் போட்டி | I | யாழினி கொங்குவேள் |
| | 9–12 ம் வகுப்பு வரை | II | சி.என்.சரவணன் |
| 20. | கட்டுரைப் போட்டி | I | லோகேஷ் ஆனந்த் |
| | கல்லூரி மாணவர்கள் | II | தீபிகா அங்கண்ணன் |
| | | III | போ.நவீன் |
| 21. | கவிதைப் போட்டி | I | தீபிகா அங்கண்ணன் |
| | கல்லூரி மாணவர்கள் | | |

❖❖❖❖❖❖

## *2008 ஆம் ஆண்டு 10-ஆம் மற்றும் 12–ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்கள்*

### *10 ஆம் வகுப்பு*

செல்வன் **சு.செல்வராஜ்** (த/பெ. எஸ்.சுந்தரமூர்த்தி, கரூர்) 2008 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10 வகுப்பு அரசுப்பொதுத்தேர்வில் கலந்துகொண்ட கொங்கு இன மாணவர்களில் 493/500 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பெற்றதைப்பாராட்டிச் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. பணம், பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

செல்வி **இரா.பவித்ரா** (த/பெ. இராஜி, நாமக்கல்) 492/500 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடம் பெற்றதைப்பாராட்டிச் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. பணம், பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

செல்வன் **சி.மோகன்ராஜ்** (த/பெ. சின்னத்தம்பி, நாமக்கல்) 492/500 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடம் பெற்றதைப்பாராட்டிச் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. பணம், பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

செல்வி ப.சரவணச் செல்வி (த/பெ. எம்.பழனிச்சாமி, நாமக்கல்) 492/500 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடம் பெற்றதைப்பாராட்டிச் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. பணம், பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

செல்வி **செ.திவ்யா** (த/பெ. க.செல்வராஜ், நாமக்கல்) 491/500 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடம் பெற்றதைப்பாராட்டிச் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. பணம், பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## 12 ஆம் வகுப்பு

செல்வன் **கே.கே.கார்த்தீஸ்வரன்** (த/பெ எஸ்.கே.கந்தசாமி, ஈரோடு) 2008 ஆம் ஆண்டில் நடைபெற்ற 12ம் வகுப்பு அரசுப்பொதுத்தேர்வில் கலந்துகொண்ட கொங்கு இன மாணவர்களில் 1183/1200 மதிப்பெண்கள் பெற்று முதல் இடம் பெற்றதைப் பாராட்டி சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. பணமுடிப்பு, பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

செல்வி **இரா.தாரிணி** (த/பெ. திரு. டி.எம். இராமலிங்கம், திருச்செங்கோடு) 1182/1200 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடம் பெற்றதைப் பாராட்டி சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. மேலும் இவர் அரசுப்பொதுத்தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்று முதல்வர்விருது உட்பட பல விருதுகளைப்பெற்றுள்ளார். இவருக்கு பணமுடிப்பு, பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

செல்வி **கி.தீபா** (த/பெ திரு. ஆர்.கிருஷ்ணசாமி, கோவை) 1180/1200 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடம் பிடித்துள்ளார். மேலும் இவர் அரசுப்பொதுத்தேர்வில் மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்று முதல்வர்விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார். இவரைச் சங்கம் பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. இவருக்கு பணமுடிப்பு, பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

**பொறியியல் சேர்க்கை** (Cut-off Mark)

செல்வன் **இரா.ஹரிஹரபிரசாத்** (த/பெ. இ.இராதாகிருஷ்ணன், சென்னை) 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற பொறியியல் சேர்க்கைக்கு 200/200 மதிப்பெண்கள் பெற்றதைப் பாராட்டி சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. பணமுடிப்பு, பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

செல்வி **கு.ரம்யா** (த/பெ. குப்புசாமி, சென்னை) 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற பொறியியல் சேர்க்கைக்கு 200/200 மதிப்பெண்கள் பெற்றதைப் பாராட்டி சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. பணமுடிப்பு, பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

❖❖❖❖❖❖